விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 017 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 21 திங்கட்கிழமை (05.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






### அரசியல் தீர்வு; மாகாண சபைத் தேர்தல்

## இந்தியா ஊடாக அழுத்தம் தமிழரசுக் கட்சி உடன்பாடு

(வவுனியா)

தமிழர்களுக்கான தீர்வை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்துதல் என்பவற்றுக்கு இந்தியா ஊடாக அழுத்தம் பிரயோகிப்பது தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து செயற்படுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 2026ஆம் ஆண் 15ஆம் பக்கம் பார்க்க

### இவ்வார இறுதியில்

## சோமரத்ன ராஜபக்ஷவை அதிகாரிகள் சந்திப்பர்



(கொழும்பு)

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பிலான மேலதிக தகவல்களைப் பெறும் நோக்கில் மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின் குற்றவாளியான மரண தண்டனைக் கைதி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன 15ஆம் பக்கம் பார்க்க

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்

## ஆபத்தான பல கூறுகள் புதிய வரைவிலும் உள்ளடக்கம்

### விடுக்கப்பட்டது எச்சரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டம் நிராகரிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்த பல்வேறு அடிப்படைக் கூறுகள், அதற்குப் பதிலீடாக வெளியிடப்பட்டுள்ள புதிய வரைவில் உள்வாங்கப்பட்டுள்ளன. ஜனநாயகக் கோட்பாடுகள் வலுவிழப்பதைப் புறந்தள்ளிவிட்டு, தேசிய பாதுகாப்பை மாத்திரம் தனித்து முன்னிலைப்படுத்த முடியாது. எனவே இப்புதிய வரைவை அரசாங்கம் உடனடியாக வாபஸ் பெறவேண்டும் என சமூக ஊடகப் பிரகடனத்துக்கான கூட்டிணைவு வலியுறுத்தியுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

### ஆண்டின் ஆரம்பத்திலேயே

## 581 பேருக்கு டெங்கு

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் இரண்டு நாட்களில் மாத்திரம் 581 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சமூக மருத்துவர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தி 15ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

2026 கல்வி ஆண்டின் முதல் தவணையின் முதற்கட்ட நடவடிக்கைகளுக்காக அனைத்துப் பாடசாலைகளும் இன்று (05) திறக்கப்படவுள்ளன.

இதற்கமைய அரச 15ஆம் பக்கம் பார்க்க

## புதிய கல்வியாண்டில் புதிய பாடத்திட்டம்

### பிரதமர் ஹரிணி உறுதி



(கொழும்பு)

இன்று (5) முதல் ஆரம்பமாகும் புதிய கல்வி ஆண்டில் தரம் ஒன்று மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தை ஜனவரி 02ஆம் பக்கம் பார்க்க

## கன்னியா விவகாரம் நீதிமன்றம் செல்வோம்

### ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்



(திருகோணமலை)

கன்னியா வெந்நீரூற்று விவகாரம் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு மாறாகச் செயற்பட்டால் நீதிமன்றம் செல்வோம் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை 02ஆம் பக்கம் பார்க்க

## கஜேந்திரகுமார் நோர்வே விஜயம்

### முக்கிய சந்திப்புக்களிலும் பங்கேற்பு


(கொழும்பு)

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் குழு நோர்வேக்கு விஜயம் செய்துள்ள நிலையில் அங்கு பலதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட 02ஆம் பக்கம் பார்க்க

### சட்டவிரோத மீன்பிடி

## இலங்கைப் படகு தீயிட்டு எரிப்பு

### சீஷெல்ஸ் அரசு அதிரடி



15ஆம் பக்கம் பார்க்க

## வெனிசுலா விவகாரம் இலங்கை அதிருப்தி

(கொழும்பு)

வெனிசுலா நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையில் அமெரிக்கா முன்னெடுத்த இராணுவத் தலையீடு மற்றும் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் கைது குறித்து அரசாங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (4) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நின்று காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கஜேந்திர...

வுள்ளது.

மேற்படி விஜயத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், உத்தியோகபூர்வ பேச்சாளர் சட்டத்தரணி சுகாஷ், கொள்கை பரப்புச்செயலாளர் ந.காண்டீபன் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றுள்ளனர்.

தமிழர்களுக்கு எதிரான கட்டமைப்புசார் தொடர் இனவழிப்பைத் தடுப்பதற்கு தாயகமும் புலம்பெயர் தேசமும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பல்வேறு சந்திப்புக்களில் அவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதன் ஒரு அங்கமாக நேற்று (4) மாலை ஒஸ்லோவில் புலம்பெயர் தமிழர்களுடனான சிநேகபூர்வ சந்திப்பொன்றில் பங்கேற்ற இக்குழுவினர், இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகள் மற்றும் தமிழர்களுக்கான சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடினர். (ந-7)

அதேபோல் பெற்றோர்களுக்கும் இது குறித்த அறிமுகத்தை வழங்குவதற்கான புதிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாடத்தெரிவுகளுக்கு மாணவர்களைப் பழக்கப்படுத்துவது உள்ளிட்ட அனைத்து விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை 7 ஆயிரத்து 181 பயிற்சியாளர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் ஊடாக ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 580 ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி புதிய பாடத் தொகுதிகளுடன் (Modules) தொடர்புடைய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களில் 93 சதவீதமானோருக்கு தற்போது பயிற்சிகள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## புதிய ...

29ஆம் திகதியும் தரம் 6 மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தை ஜனவரி 21ஆம் திகதியும் ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (4) இடம்பெற்ற கல்விச் சீர்திருத்தங்கள் குறித்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு பிரதமர் மேலும் கூறியதாவது, புதிய கல்வி சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்துவது மட்டுமன்றி அதற்கு இணையாக புதிய முறைக்கு மாணவர்களைப் பழக்கப்படுத்துவதற்கான திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## கன்னியா ...

கன்னியாவுக்கு நேற்று (04) விஜயம் செய்து அங்கு இடம்பெறும் நடவடிக்கைகள் தொடர்பில் பார்வையிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றில் சில வருடங்களுக்கு முன்னதாக பிரச்சினைகள் இருந்தமை அனைவருக்கும் தெரியும். அங்கிருந்த பிள்ளையார் கோயிலை மீளவும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்தபோது அது தடுக்கப்பட்டதும் கோயில் இருந்த மேடையில் பௌத்த கொடி நாட்டப்பட்டு, தொல்லியல் திணைக்களத்தினால் எவ்வித கட்டுமானமும் செய்ய முடியாது என்று கூறியும் விகாரை ஒன்றைக் கட்டுவதற்கான முயற்சி எடுக்கப்பட்ட சம்பவம் 2019ல் இடம்பெற்றது.

அந்த வேளையில் நாங்கள் திருகோணமலை மேல்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்து அந்த நிலத்துக்கு சொந்தமான கோகிலாரமணி அம்மையாருக்காக நீதிமன்றில் நான் ஆஜராகி இடைக்காலத் தடை ஒன்றும் பெறப்பட்டிருந்தது.

கட்டுமானப் பணிகளை நிறுத்தி வைப்பதற்காக தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் இது தொடர்பான சில நடவடிக்கைகளை நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்திய போது அதில் பண்டைய விகாரை இருந்ததாக அடையாளங்கண்டிருந்தார்கள்.

பிள்ளையார் கோயில் 150 வருடங்கள் இருப்பதற்கான ஆதாரங்கள் இருந்தன. ஆனால் 2000ம் ஆண்டுக்கு முன்னதாக விகாரை இருந்ததாகவும் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் ஒரு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

பண்டைய விகாரை அங்கு இருந்திருந்தால் அதனைப் பேணிப்பாதுகாக்கும் பொறுப்பு தொல்லியல் திணைக்களத்துக்கு இருக்கிறது.

ஆனால் மீள் கட்டுமானம் எதுவும் செய்ய முடியாது. ஆகவே பேணிப்பாதுகாக்கும் பொறுப்பை அவர்கள் செய்யலாம். அதேவேளை 150 வருடங்களாகப் பிள்ளையார் கோயில் அங்கு இருந்ததன் காரணமாக அந்த இடத்தில் இன்னொரு அளவீடு செய்யப்பட்டு இடம் அடையாளப்படுத்தப்பட்டு அதில் பிள்ளையார் கோயிலை மீளவும் கட்டலாம் என நீதிமன்றத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டோடு குறித்த வழக்கு முடிவுறுத்தப்பட்டது. அந்த இணக்கப்பாட்டுக்கு மாறாக அங்கு சில நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

குறித்த காணியின் உரிமையாளர் ரமணி அம்மா இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். குறித்த வழக்கில் இரண்டாவது பிரதிவாதியாக இருந்த அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றையும் எழுதியிருக்கிறார். நானும் நேற்றுக் காலை திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன் அவர்களுடன்சென்று அதனை பார்வையிட்டேன். பண்டைய விகாரை இருந்ததாகச் சொல்லப்படும் மேட்டினை பேணிப்பாதுகாப்பதற்கு மேலதிகமாக வேறு சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறன.

ஆகவே இவ்விடயம் சம்மந்தமாக நீதிமன்றத்தின் இணக்கப்பாட்டுக்கு மாறாக தொல்பொருள் திணைக்கள அனுமதியோடு நடைபெறுவதன் காரணமாக நீதிமன்றுக்கு இதனைத் தெரியப்படுத்துவது என்று தீர்மானித்துள்ளோம்.

இந்த வழக்கில் பிரசன்னமாகிய சட்டத்தரணி பிரசாந்தினி உதயகுமாரும் இங்கு இருக்கிறார்.

எனவே இணக்கப்பாட்டுக்கு மாறாகச் செயற்பட்டால் நீதிமன்றம் செல்வோம் என்றார். (ந-7)

## ஆபத்தான ...

தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் எனும் புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதனை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டிருப்பதுடன், அதுபற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அறிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருக்கும், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவானது, தற்போது நடைமுறையிலிருக்கும் பயங்கரவாதத்தடைச் சட்டத்துடன் ஒப்பிடுகையில் அடையப்பட்டிருக்கும் மனித உரிமைகள் சார்ந்த பெருவெற்றி போல் காண்பிக்கப்படுகின்றது.

அந்த விம்பத்தின் விளைவாக நிர்வாக ரீதியான தடுத்துவைப்பு, இராணுவ அதிகாரங்கள், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் சார்ந்த குற்றங்கள் என்பன உள்ளடங்கலாக அவ்வரைவில் உள்வாங்கப்பட்டுள்ள மிகமோசமான - அடிப்படைகள் பற்றிய தெளிவற்ற தன்மை நிலவுகின்றது.

பயங்கரவாதத்தடைச் சட்டம் நிராகரிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்த பல்வேறு அடிப்படைக் கூறுகள் இவ்வரைவில் உள்வாங்கப்பட்டுள்ளன.


பயங்கரவாதக்குற்றங்கள் தொடர்பில் குற்றவியல் சட்டத்துடன் அவசியமேற்படும் பட்சத்தில் அவசரகால வழிகாட்டல்களை இணைத்துப் பிரயோகிப்பதை விடுத்து, பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் பிரயோகிக்கப்படுமாயின், அது சம்பந்தப்பட்ட நபருக்கான பாதுகாப்பு தளர்த்தப்பட்ட குற்றவியல் அடிப்படையுடன், பரந்துபட்ட நிறைவேற்றதிகாரப் பிரயோகத்துக்கும் இடமளிக்கும்.

பரந்துபட்ட அதிகார வழங்கலுக்கு வாய்ப்பளிக்கும் இச்சட்ட வரைவின் அடிப்படை நோக்கம், அதன் பெயரில் உள்ளவாறு பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதே தவிர, வன்முறைகளிலிருந்து சாதாரண மக்களைப் பாதுகாப்பதல்ல.

ஜனநாயகக் கோட்பாடுகள் வலுவிழப்பதைப் புறந்தள்ளிவிட்டு, தேசிய பாதுகாப்பை மாத்திரம் தனித்து முன்னிலைப்படுத்த முடியாது. எனவே இவ்வரைவை உடன் வாபஸ் பெறுமாறும், சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்புடையவாறு புதிய சட்டத்தை உருவாக்குவது குறித்து சகல தரப்பினருடனும் பரந்துபட்ட கலந்துரையாடல்களை முன்னெடுக்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

23 வது ஆண்டை நோக்கி
RAVEENS EMC KARAVEDDY
(ENGLISH MEDIUM)
(Most Prominent Institution for ENGLISH MEDIUM in Srilanka)
03.01.2026 சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
தரம் 6க்கான வகுப்புகள் (கல்வி மறுசீரமைப்புக்குரியது)
தரம் 10ல் 3 மாணவர்களுக்கு அனுமதியுண்டு
தொகுதிப் பாடங்கள் :
01.English Literature 02.ICT 03.Commerce
SRILANKA and RAVEENS EMC
Both are CLEAN
P.Easwaranathan
(Director)
(C-4745)

கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி உயிரியல் பாட ஆசிரியை
**அனந்தினி சிவநடராஜா** அவர்களின்
அன்புத் தந்தையார்
சின்னத்தம்பி
அருணகிரிநாதன்
அவர்கள் 03.01.2026 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்
யாழ். இந்து மகளிர்
கல்லூரிச் சமூகம்
(C-4746)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பாண்டில் புதிய மருந்துகள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படும்

## இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

**(கொழும்பு)**

**இந்த வருடத்தில் 10 புதிய மருந்து வகைகளைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.**

இந்த வருடத்தில் 4ஆயிரம் மில்லியன் மாத்திரைகள் மற்றும் குளிசைகளை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக அந்தக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் 70 வகையான மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதேவேளை, வரலாற்றில் அதிகளவான மருந்து உற்பத்தியைக் கடந்த வருடம் முன்னெடுக்க அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் முடிந்துள்ளது.

அதற்கமைய 3ஆயிரத்து 625 மில்லியன் மாத்திரைகள் மற்றும் குளிசைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட அதிகூடிய மருந்து உற்பத்தியான 385 மில்லியன் மாத்திரைகள் மற்றும் குளிசைகள், கடந்த வருடம் மார்ச் மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 5 புதிய மருந்துகள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், மருத்துவ விநியோகப் பிரிவு வழங்கிய அனைத்து கொள்வனவுக் கட்டளைகளையும் தட்டுப்பாடின்றி விநியோகிக்கவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

2025 ஆம் ஆண்டில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானம் 27.06 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# மகப்பேற்றியல் சங்கத் தலைவராக பேராசிரியர் ருவந்தி பெரேரா



(கொழும்பு)

இலங்கை மகப்பேற்றியல் மற்றும் மகளிர் மருத்துவ சங்கத்தின் 25 ஆவது தலைவராக பேராசிரியர் ருவந்தி பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

"உயிர்வாழ்வு மற்றும் சிறந்த தாய் மற்றும் சேய் பராமரிப்புடன் வளமாக வாழ்தல்" என்ற கருப்பொருளின் கீழ் இந்த பதவியேற்பு விழா நடைபெற்றது.

கொழும்பில் உள்ள தி கிராண்ட் மைட்லேண்ட் ஹோட்டலில் நடைபெற்ற இந்த விழாவிற்கு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமை வகித்திருந்தார்.(8)

# காதலுக்கு எதிர்ப்பு தந்தையைக் கொன்ற தனயன்

(கொழும்பு)

மொனராகலை, பிபிலை பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான குறித்த குடும்பஸ்த்தரின் மகன், யுவதி ஒருவரைக் காதலித்து வந்துள்ளார். இந்தக் காதலுக்குத் தந்தை கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளார்.

இந் நிலையில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது வீட்டில் மறைத்து வைத்திருந்த கூரிய ஆயுதத்தால் தந்தையை மகன் வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

மகனைக் கைது செய்துள்ள பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8)

# 600 கிலோ கஞ்சா அழிப்பு



(கரணவாய்)

பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட 600 கிலோ கஞ்சா பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் நேற்றைய தினம் அழிக்கப்பட்டது. (8-60)

# நயினாதீவு விகாராதிபதி - அரசாங்க அதிபர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு விகாராதிபதி நவதகல பதும கிர்த்தி திஸ்ஸ நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை, அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.



இச் சந்திப்பில் தையிட்டி விகாரை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அரசாங்க அதிபரால் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாக விகாராதிபதி கேட்டறிந்து கொண்டார்.

மேலும் விகாராதிபதி தமது பக்க நிலைப்பாடுகளையும் அரசாங்க அதிபரிடம் தெரிவித்தார். (8-33)

# சதொசவின் முகாமையாளர் கைது

(கொழும்பு)

சதொசவின் முன்னாள் போக்குவரத்து முகாமையாளர் இந்திக்க ரத்ன மலல நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் புதல்வரான ஜோஹான் பெர்ணான்டோ, சதொசவிற்குச் சொந்தமான லொறி ஒன்றை முறைக்கேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (8)

# வாகன இறக்குமதி குறையலாம் இலங்கை சுங்கத்துறை அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வாகன இறக்குமதி குறையும் என எதிர்பார்ப்பதாக இலங்கை சுங்கத்துறையின் ஊடக பேச்சாளர் சந்தன் புஞ்சிஹேவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில ஊடக மொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுங்கத்துறையின் வருவாய் இலக்கு நடப்பாண்டில் 2ஆயிரத்து 206 பில்லியனாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வாகன இறக்குமதியில் இருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் வீழ்ச்சியை கருத்தில் கொண்டு இந்த தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன் கடந்த ஆண்டை விட வாகன இறக்குமதி குறையும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (8)

# டித்வா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்டிய மாணவி



(அராலி)

டித்வா புயலால் அண்மையில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் கையேடுகளை தயாரிப்பதற்கான நிதி சேகரிப்பில் வெண்கரம் அமைப்பின் தன்னார்வலர்கள் ஈடுபட்டு வந்தனர். இந் நிலையில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவி யான பு.சர்ஜனா, தான் சிறுக சிறுக சேகரித்த உண்டியல் பணத்தினை கற்றல் கையேடுகளைத் தயாரிப்பதற்காக வழங்கியுள்ளார்.

வெண்கரம் அமைப்பினர் குறித்த மாணவியின் சமூக நலனைப் பாராட்டி, அவரை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (8-104)

# பருத்தித்துறையில் கைக்குண்டு!

(கரணவாய்)

பருத்தித்துறை கொட்டடி மீன் சந்தைக்கு அருகாமையில் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதி கடற்கரையில் வான் தோண்டப்பட்ட மணலினைப் பரவிய போதே இக் கைக்குண்டு தென்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவைப் பெற்று அதை மீட்பதற்கான நடவடிக்கையினைப் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (8-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## நியூசிலாந்து தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு



நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சுப்மன் கில் தலைமையிலான குறித்த குழாமில் ரோஹித் சர்மா, விராட் கோலி, யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஸ்ரேயஸ் ஐயர், கே.எல். ராகுல், ரிஷப் பண்ட், ரவீந்திர ஜடேஜா, வொஷிங்டன் சுந்தர், நிதிஷ் குமார் ரெட்டி, மொஹமட் சிராஜ், குல்தீப் யாதவ், அர்ஷ்தீப் சிங், பிரசித் கிருஷ்ணா மற்றும் ஹர்ஷித் ராணா ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.


காயம் காரணமாக கடந்த காலங்களில் சில போட்டிகளில் விளையாடாமல் இருந்த ஸ்ரேயஸ் ஐயர், தற்போது முழு உடல் தகுதியுடன் அணிக்குத் திரும்பியுள்ளார்.

மேலும் அவர் இந்தத் தொடரில் துணை தலைவராகவும் செயற்படவுள்ளார். அத்துடன் ஜஸ்பிரித் பும்ரா மற்றும் ஹர்திக் பாண்டியா ஆகியோருக்கு இந்த தொடரில் ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

இந்திய மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் ஜனவரி 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## இன ரீதியான பாரபட்சம் இன்னும் மாறவில்லை

### ஓய்வு அறிவிப்பில் உஸ்மான் கவாஜா



தனது 15 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெறுவதாக 39 வயதான உஸ்மான் கவாஜா அறிவித்துள்ளார்.

சிட்னியில் நடைபெறவுள்ள ஐந்தாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியே இவரது இறுதிப் போட்டியாகும்.

அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடிய முதல் முஸ்லிம் வீரரான அவர், தனது இறுதிப் போட்டியின் போது மௌனமாக இருக்க விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், இங்கிலாந்துக்கு எதிரான தொடரின் போது தனக்கு ஏற்பட்ட முதுகுவலி காயத்தை ஊடகங்களும் முன்னாள் வீரர்களும் கையாண்ட விதம் குறித்து அவர் அதிருப்தி வெளியிட்டார்.

பாகிஸ்தானியர்கள், மேற்கிந்திய தீவு வீரர்கள் அல்லது கறுப்பின வீரர்கள் காயமடைந்தால், அவர்கள் "சோம்பேறிகள், சுயநலவாதிகள் அல்லது கடினமாக உழைக்காதவர்கள்" என்ற இன ரீதியான முத்திரைகள் குத்தப்படுவதாக அவர் சாடினார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் இன்னும் "மிகவும் வெள்ளையினத்தவர்" சார்ந்ததாகவே இருப்பதாகவும், இஸ்லாமிய எதிர்ப்பு உணர்வு இன்னும் மேலோங்கி இருப்பதாகவும் அவர் பகிரங்கமாகத் தெரிவித்தார். தன்னை விமர்சிப்பவர்கள் மீண்டும் "இனவாத அட்டையை" பயன்படுத்துவதாகக் கூறுவார்கள் என்று தெரிந்தே இதைப் பேசுவதாக அவர் குறிப்பிட்டார்.

அடுத்த தலைமுறை உஸ்மான் கவாஜாக்களின் பயணம், ஒரு "ஜோன் ஸ்மித்" என்பவரின் பயணத்தைப் போலவே சமமானதாக அமைய வேண்டும் என்பதே தனது விருப்பம் என அவர் தெரிவித்துள்ளார்.

"மக்களின் சம்பியன்" என்று தன்னை அழைத்துக்கொள்ளும் கவாஜா, மற்றவர்கள் பேசத் தயங்கும் உண்மைகளைத் தான் பேசுவதாகவும், எதிர்கால வீரர்களுக்காகவே இந்த மாற்றங்களைக் கோருவதாகவும் கூறித் தனது உரையை நிறைவு செய்தார். (3)

### இந்தியாவிற்கு செல்ல மறுப்பு

## உலகக் கிண்ணப் போட்டிகளை இலங்கைக்கு மாற்ற பங்களாதேஷ் கோரிக்கை

எதிர்வரும் ரி- 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்குச் சென்று விளையாடப் போவதில்லை என பங்களாதேஷ் அதிரடி முடிவை எடுத்துள்ளதுடன், தங்களது லீக் போட்டிகளை இலங்கைக்கு மாற்றக் கோரி சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் முறையிட தீர்மானித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலையீட்டால், இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியால் ஏலம் எடுக்கப்பட்ட பங்களாதேஷ் வீரர் முஸ்தபிசுர் ரஹ்மான் திடீரென விடுவிக்கப்பட்டதே இந்த மோதலுக்கு முக்கிய காரணமாகும்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பங்களாதேஷ் விளையாட்டுத் துறை ஆலோசகர் ஆசிப் நஸ்ருல் தமது பேஸ்புக் பதிவில், ஒரு ஒப்பந்த வீரருக்கே இந்தியாவில் பாதுகாப்பு இல்லாதபோது, தேசிய அணி அங்கு சென்று விளையாடுவது பாதுகாப்பானதாக இருக்காது என்றும், அடிமைத்தனத்தின் காலம் முடிந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பங்களாதேஷில் இந்தியன் ப்ரீமியர் லீக் ஒளிபரப்பைத் தடை செய்யவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகி இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதைத் தொடர்ந்து, இந்தியா மற்றும் பங்களாதேஷுக்கு இடையிலான உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

ஷேக் ஹசீனாவுக்கு பங்களாதேஷ் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ள சூழலில், இரு நாடுகளுக்கு இடையிலான இந்த அரசியல் பதற்றம் தற்போது கிரிக்கெட் களத்திலும் எதிரொலிக்கிறது.

திட்டமிட்டபடி நடந்தால், கொல்கத்தாவில் மேற்கிந்தியத் தீவுகள், இத்தாலி, இங்கிலாந்து ஆகிய அணிகளுடனும், மும்பையில் நேபாளத்துடனும் பங்களாதேஷ் மோத வேண்டியுள்ளது.

இந்தப் போட்டிகளையே இலங்கைக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் கடைசி நேரத்தில் போட்டிகளை மாற்றுவது நிர்வாக ரீதியாகச் சாத்தியமில்லை என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தரப்பு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




விமானப் பயணச்சீட்டுகள், விடுதி முன்பதிவுகள் என அனைத்தும் முடிந்துவிட்ட நிலையில், ஒருவரின் விருப்பத்திற்காக அட்டவணையை மாற்ற முடியாது, எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலைக்கழகத்தில்

# நீண்டகாலம் சேவையாற்றிய

### விரிவுரையாளர்கள், பணியாளர்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகபணியாளர்கள் மதிப்பளிப்பு வைபவம் கடந்த 1 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற அரச சேவையின் முதல் நாள் உறுதியுரையேற்பு நிகழ்வைத் தொடர்ந்து பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் மதிப்பளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 2025 ஆம் ஆண்டு 25 வருட கால சேவையைப் பூர்த்தி செய்த விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்களும், கடந்த ஆண்டு ஓய்வு பெற்ற விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்களுமாக 43 பேர் பதக்கம் அணிவிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில், முன்னாள் துணைவேந்தர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் உட்படப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (8-33)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச மருத்துவ மூலிகைகளை அதிகளவில் உற்பத்தி செய்தால் உள்ளூர் தேவைகளை நிறைவேற்றலாம்

## ஆளுநர் வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்திலிருந்து சுதேச வைத்தியத் துறைக்குத் தேவையான மருத்துவ மூலிகைகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். அவை எமது மாகாணத்தின் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் நிலையை அடைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், சுதேச மருத்துவத் துறை இன்று வளர்ச்சியடைந்து வருகின்றது. எனவே, இத்துறையைச் சுற்றுலாத் துறையுடன் இணைப்பதன் மூலம் இதனை மேலும் விஸ்தரிக்க முடியும். பல சுற்றுலாப் பயணிகள் சுதேச மருத்துவ சிகிச்சைக்காகவே வருகை தருகின்றனர். எனவே, இவ்விரு துறைகளும் இணைந்து செயலாற்ற வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் வன்னிப் பிரதேசம் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். அங்கு போக்குவரத்து வசதிகள் சீராக இல்லாததுடன், பல கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளன.

இவ்வாறான பிரதேசங்களில் வசிக்கும் எமது மக்களுக்குத்தான் எங்களுடைய சேவைகள் அதிகமாகத் தேவைப்படுகின்றன.

எனினும், சுதேச வைத்தியத்துறையின் நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட சிலர், யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நியமனங்கள் கிடைத்தமையால், அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டது மிகுந்த வேதனையளிக்கின்றது.

அரச சேவையில் எவருக்கும் எந்தவொரு இடமும் நிரந்தரமானதல்ல. "எந்தப் பிரதேசத்திலும் சேவை யாற்றுவோம்" என உறுதியுரை எடுத்தே நாம் பணிக்கு இணைகின்றோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

இன்று அனைத்து வசதிகளும் உள்ள நிலையில், பின்தங்கிய பிரதேசங்களுக்குச் செல்லத் தயங்குவது கவலையளிக்கின்றது.

தற்போது எமக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கும் மேலதிகமாக நிரல் அமைச்சுக்களிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

எனவே, இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்தி எமது மாகாணத்தை நாம் மேம்படுத்த வேண்டும் என்றார். (8)



# குரங்குகளை கட்டுப்படுத்த வாயுத்துப்பாக்கிகள்



(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாயத்திற்கு அச்சுறுத்தலாகக் காணப்படுகின்ற குரங்குகளைக் கட்டுப்படுத்தும் முகமாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் நிதி ஒதுக்கீடு ஊடாக கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் வைத்து 20 வாயுத்துப்பாக்கிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேவைப்பாடுடைய 20 கமக்கார அமைப்புகளுக்கே மேற்படி வாயுத்துப்பாக்கிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

வாயுத்துப்பாக்கி வழங்கும் நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் சத்தியசோதி, சாவகச்சேரிப் பிரதேசசபையின் உபதவிசாளர் யோகேஸ்வரன், பிரதேசசபையின் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (8-30)

# நாவற்குழியில் வீதி திறந்து வைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட நாவற்குழி வட்டாரத்தில் உள்ள 300 வீட்டுத்திட்ட 4 ஆம் வீதி புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு 20 இலட்சம் மூலம் சாவகச்சேரிப் பிரதேசசபை ஊடாக மேற்படி அபிவிருத்தி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.



திறப்பு விழாவில் சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன், உபதவிசாளர் இ.யோகேஸ்வரன் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (8-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 700 | 200 | 700 | 800 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1400 | 1200 | 1600 |
| தக்காளி | 600 | 500 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150 |
| கோவா | 300 | 300 | 350 | 400 |
| கரட் | 550 | 600 | 600 | 800 |
| பூசணி | 160 | 140 | 120 | 200 |
| புடோல் | 400 | 400 | 300 | 400 |
| வாழைக்காய் | 100 | 350 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 200 | 240 |
| பாகற்காய் | 800 | 1000 | 600 | 1200 |
| வெண்டக்காய் | 400 | 200 | 200 | 600 |
| கருணைக் கிழங்கு | 350 | 260 | 300 | 400 |
| பயற்றங்காய் | 600 | 700 | 700 | 600 |
| லீக்ஸ் | 500 | 450 | 600 | 800 |
| பீற்றூட் | 800 | 650 | 1000 | 1000 |
| கறிமிளகாய் | 1000 | 1300 | 1000 | 1600 |
| முருங்கைக்காய் | 2000 | -- | 2000 | -- |
| போஞ்சி | 600 | 700 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 600 | 650 | 600 | 600 |
| கீரை - 1 பிடி | 150 | 80-140 | 200 | 200 |
| தேசிக்காய் | 600 | 600 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 120-160 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 1000 | 1000 | 800 |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 100 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகரசபை
## வரியிறுப்பாளர் கவனத்திற்கு...

வரியிறுப்பாளர்கள் தமது ஆதனங்களுக்கான 2026 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை ஜனவரி 31 ஆம் திகதிக்குள் செலுத்தி 10% கழிவினையும், காலாண்டிற்கான ஆதனவரியினை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தி 5% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

| விபரம் | செலுத்த வேண்டிய திகதி | கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி | கழிவு வீதம் |
|---|---|---|---|
| முழுஆண்டுக்குமானது (01.01.2026 -31.12.2026) | 01.01.2026 - 31.01.2026 | 31.01.2026 | 10% |
| முதலாவது காலாண்டு | 01.01.2026 - 31.03.2026 | 31.01.2026 | 5% |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2026-30.06.2026 | 30.04.2026 | 5% |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2026- 30.09.2026 | 31.07.2026 | 5% |
| நான்காவது காலாண்டு | 01.10.2026 - 31.12.2026 | 31.10.2026 | 5% |

மேலும் யாழ் மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும், தைப்பொங்கல் தவிர்ந்த பொது விடுமுறை நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும் ஆதனவரியினைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறிவித்தல் (K form) கிடைக்கப் பெறாதவர்கள் இதற்கு முன்னைய ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல் அல்லது ஆதன வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு அல்லது ஆதனம் அமைந்துள்ள வட்டாரம், வீதி மற்றும் ஆதன இலக்கம் போன்ற விபரங்களைச் சமர்ப்பித்தும் 2026 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியைச் செலுத்த முடியும்.

இதே போன்றே கடந்த காலங்களுக்கான ஆதனவரி நிலுவைகளையும் செலுத்துவதன் மூலம் சேவைகளையும் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும். 2025 ஆம் ஆண்டின் ஆதனவரிப் பெறுமதியிலும் கட்டணங்களிலும் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.

2026 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் முழுமையாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் 31.12.2025 ஆம் திகதிக்குள் ஆதனவரி அறிவித்தல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் யாழ் மாநகரசபையின் ஆதனவரி பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**வி.மதிவதனி**
**மாநகர முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.** (C-4742)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 2 நாச்சிமார்கோவில் வீதி 154/135 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எம். இளையதம்பி என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை யாழ்ப்பாணம் 54/03 இராமநாதன் வீதியைச் சேர்ந்த நாகமுத்து செல்லத்துரையும் பெண் றோசம்மாவும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு ப.யோ.அன்ரனி முகதாவில் 23.10.2011 ஆம் திகதி 152ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 0 குளி 17.50 அளவு கொண்ட ஆதனத்தை அவர்களது மகள் செல்லத்துரை ஜெயந்தினிக்கு நன்கொடையளித்து ஆட்சியை ஒப்படைத்துள்ளனர்.

மேலும் இவ்வுறுதியில் இவ்வாதனம் எமது சொந்தமும் நீண்டகால ஆட்சியுமான தென்றும் வெளிப்படுத்தியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "ஆத்திக் குளத்திவோடையும் ஆத்திப்புலமும்" உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரி.தங்கராஜா அவர்கள் 25.09.2011 அன்று அளந்து தயாரித்த 4863 ஆம் இலக்க வரைப்படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 00 குளி 17.50 இற்கும் எல்லைகள்

கிழக்கு -அன்னமார் கோவில் ஒழுங்கை
வடக்கு -தம்பிராசா சுந்தரலிங்கத்தின் ஆதனம்
மேற்கு சீனிவாசகம் குணரட்ணத்தின் ஆதனம்
தெற்கு - வேலு இரட்ணத்தின் ஆதனம் இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை செல்லத்துரை ஜெயந்தினி என்பவர் தமது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்லத்துரை ஜெயந்தினி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.** (C-4741)

# வட மாகாண சுற்றுலாத்துறைத் தலைவராக விவேகானந்தன் கடமையேற்பு



(சாவகச்சேரி)

வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி ஜெகநாதன் விவேகானந்தன் தனது கடமைகளை கடந்த முதலாம் திகதி பொறுப்பேற்றார்.

கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இவ்வாண்டில், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் நோக்கில் " நீ அக்ரிவேட் நொதோன் ரூரிஷம் 2026" ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (8-30)

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் சமீபத்திய டித்வா புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு "அற்றார் அழிபசி தீர்த்தல்" என்ற திட்டத்தின் மூலம் உலருணவுப் பொதிகளை வழங்கி வருகிறது.

அந்தவகையில் கடந்த 31ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சியில் குமாரபுரம், மயில்வாகனபுரம், கனகாம்பிகைக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 125 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் வி. கிருஸ்ணவேணி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் த.ஜெகதீஸ்வரன், பசுமை இயக்கத்தின் இணைப்பாளர்கள் த. திலக்சிகா, ஞா.ரஞ்சிதமணி ஆகியோர் உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்கள். இதற்கான நிதி அனுசரணையை கனடாவிலுள்ள இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம், இலண்டன் கூடல் அமைப்பு இணைந்து வழங்கியிருந்தன. (8)

# வட மாகாணத்தினுள் பேருந்து சேவைகளை வழங்குவதற்கான விலைமனு கோரல்

வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையானது தேவையான தகைமைகளை கொண்டுள்ள பேரூந்து உரிமையாளர்களிடம் இருந்து கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகளுக்கான பேரூந்து சேவைகளை வழங்குவதற்கு விலைமனு கோருகின்றது.

| இல | பாதை விபரம் | மீளளிக்க முடியாத வைப்பு | மீளளிக்கப்படக் கூடிய வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை | அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | முத்தையன்கட்டு – மாங்குளம் (ஒட்டிசுட்டான் ஊடாக) | 2000.00 | 10,000.00 | 200,000.00 | 5 வருடங்கள் |
| 02 | பருத்தித்துறை – முல்லைத்தீவு (பரந்தன் ஊடாக) | 5000.00 | 160,000.00 | 3,200,000.00 | 5 வருடங்கள் |
| 03 | சுதந்திரபுரம் - புதுக்குடியிருப்பு (தேவிபுரம் - இரணைபாலை) | 2000.00 | 5000.00 | 100,000.00 | 5 வருடங்கள் |

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் பின்வருமாறு

1. விண்ணப்பதாரி வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நியதிச்சட்ட பிரமாணங்களுக்கு அமைவாக விண்ணப்பம் செய்தல் வேண்டும். அத்துடன் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து வருடங்களாவது வடமாகாணத்தினை நிரந்தர வதிவிடமாக கொண்டிருப்பதனை வாக்காளர் பட்டியல் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.
2. விலைமனு கோரல் விண்ணப்பப்படிவங்களை 05.01.2026 ஆம் திகதி முதல் 22.01.2026 ஆம் திகதி வரை கிளிநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலகத்தில் காலை 9:00 மணியில் இருந்து மாலை 3:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
3. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 23.01.2026 ஆம் திகதி காலை 10:00 மணிக்கு முன்னர் பெறுகைக்குழு தலைவர், வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, கிளிநகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பொது முகாமையாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பாதை விபரத்தில் குறிப்பிடப்பட்டவற்றில் உரிய பாதையின் விபரத்துடன் பாதைக்கான பேரூந்து சேவைக்கான விண்ணப்பம்" என குறிப்பிடல் வேண்டும். கேள்வி திறத்தல்கள் அன்றைய தினம் முற்பகல் 10.00 இற்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வீதிப்பயணிகள் போக்குவரத்து**
**அதிகாரசபை, வடமாகாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# மூன்றாம் உலகப்போரை தொடங்க அமெரிக்கா விரும்பினால் அதை எதிர்கொள்ள நாங்கள் தயார்



## வடகொரிய ஜனாதிபதி காட்டம்

**(பியோங்யொங்)**

**தென் அமெரிக்க நாடான வெனிசுலா மீது கோர தாக்குதல் நடத்திய அமெரிக்கா மூன்றாம் உலகப் போரை தொடங்க விரும்பினால் எதை எதிர்கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம் என வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

வெனிசுலா தலைநகர் காரகாஸில் உள்ள முக்கிய இராணுவ நிலையங்கள் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா வெனிசுலாவின் எண்ணெய் இருப்பை இனி அமெரிக்க நிறுவனங்களே நிர்வகிக்கும் என்றும், அமெரிக்காவுக்கு சாதகமான அரசு அமையும் வரை அங்கு அமெரிக்க ராணுவம் தங்கியிருக்கும் என்றும் அறிவித்துள்ளது.

இந் நிலையில் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் அரசு ஊடகம் மூலம் கிம் ஜாங் உன் வெளியிட்ட அறிக்கையில்,

"அமெரிக்கா தனது ஏகாதிபத்திய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி ஒரு நாட்டின் இறையாண்மையைப் பறித்துள்ளது. எங்களது நெருங்கிய நண்பரான மதுரோவை உடனடியாக விடுவிக்க வேண்டும்.


ஒரு நாட்டின் தலைவரைக் கடத்துவது சர்வதேச பயங்கரவாதம். அமெரிக்கா உலக நாடுகளுக்குப் பாடம் சொல்லும் தகுதியை இழந்து விட்டது. இது ஒரு காட்டுமிராண்டித்தனமான செயல்.

தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அணு ஆயுதங்கள் இல்லாத நாடுகளுக்கு இது ஒரு எச்சரிக்கை பாடம். ஆனால், வடகொரியா அப்படிப்பட்டது அல்ல. எங்களது நட்பு நாடுகளுக்கு ஆபத்து ஏற்பட்டால், நாங்கள் வேடிக்கை பார்க்கமாட்டோம்.

ட்ரம்பின் இந்தச் செயல் உலகை மற்றுமொரு பேரழிவை நோக்கித் தள்ளுகிறது. மூன்றாம் உலகப் போர் தொடங்க அமெரிக்கா விரும்பினால், அதை எதிர்கொள்ள நாங்கள் தயார். எங்களது ஏவுகணைகள் சரியான இலக்கை நோக்கித் தயாராக உள்ளன.

உலக நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அமெரிக்காவின் இந்த அராஜகப் போக்கை எதிர்க்க வேண்டும். இல்லையெனில், அடுத்த இலக்கு நீங்களாகக் கூட இருக்கலாம். ட்ரம்ப் நெருப்போடு விளையாடுகிறார். மதுரோவின் கைது என்பது ஒரு தனிமனிதனின் கைது அல்ல, அது உலக நாடுகளின் சுதந்திரத்தின் மீதான தாக்குதல். இதற்கான விலையை அமெரிக்கா மிகக் கடுமையாகக் கொடுக்க வேண்டியிருக்கும்." என்று தெரிவித்துள்ளார். (3)

# வெனிசுலாவின் இடைக்கால ஜனாதிபதியாக டெல்சி ரோட்ரிக்ஸ் நியமனம்



(காரகாஸ்)

வெனிசுலா மீது நேற்று முன்தினம் திடீர் தாக்குதல் நடத்திய அமெரிக்கா, அந்நாட்டு ஜனாதிபதி நிககோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை சிறைபிடித்தது. அவர்கள் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

மேலும் வெனிசுலா எண்ணெய் இருப்பை இனி அமெரிக்க நிறுவனங்களே நிர்வகிக்கும் என்றும், அமெரிக்காவுக்கு சாதகமான அரசு அமையும் வரை அங்கு அமெரிக்க ராணுவம் தங்கியிருக்கும் என்றும் ட்ரம்ப் அறிவித்தார்.

வெனிசுலாவில் பதற்றமான சூழல் நிலவுவதால் அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வெனிசுலாவின் இடைக்கால ஜனாதிபதியாக தற்போதைய துணை ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்கை நியமித்து அந்நாட்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, வெனிசுலா துணை ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸ் அரசுத் தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவிக்கையில், "வெனிசுலாவின் ஒரே ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மட்டும் தான். அவரை உடனடியாகவும், நிபந்தனையின்றியும் அமெரிக்கா விடுதலை செய்ய வேண்டும். எங்கள் நாட்டு மக்களைப் பாதுகாக்க அனைத்து பாதுகாப்புப் படைகளையும் நாங்கள் தயார் நிலையில் வைத்துள்ளோம் என்றார். (3)

# அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்து




(பன்ஜுல்)

காம்பியா நாட்டில் புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஏழு பேர் பலியாகியதுடன் 91 இற்கும் மேற்பட்டோர் மாயமாகியுள்ளனர்.

ஆபிரிக்க நாடான காம்பியாவைச் சேர்ந்த இளைஞர்கள் வேலை தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வது வழக்கம். அவர்கள் அத்திலாந்திக் கடல் வழியாக படகுகளில் ஆபத்தான முறையில் சட்டவிரோதமாக பயணம் மேற்கொள்கின்றனர். அப்படி பயணிக்கும் படகுகள் விபத்தில் சிக்குவது தொடர்கதையாக உள்ளது.

இந்நிலையில், 200 இற்கும் மேற்பட்டோர் சென்ற படகு ஒன்று, வடமேற்கு காம்பியாவின் நார்த் பேங்க் பகுதியில் உள்ள ஜினாக் அருகே கவிழ்ந்தது. இதில், 102 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் 7 பேர் உயிரிழந்தனர். காணாமல் போன மற்றவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதில் மணல் திட்டு ஒன்றில் அருகே விபத்தில் சிக்கி படகு கவிழ்ந்தது கண்டறியப்பட்டது. படகில் சென்றவர்கள் ஆபிரிக்காவின் பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

கடந்த ஆண்டு ஓகஸ்டில் காம்பியாவில் இருந்து புறப்பட்ட படகு மொரிட்டானியா அருகே கவிழ்ந்ததில், 150 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## வெனிசுலா மீதான அமெரிக்காவின் கோர தாக்குதல்

# உலக நாடுகள் கடும் கண்டனம்!

(காரகாஸ்)

**வெனிசுலா மீது நேற்று முன்தினம் திடீர் தாக்குதல் நடத்திய அமெரிக்கா அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. இந்த தாக்குதலுக்கு ரஷ்யா, ஈரான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**





வெனிசுலா மீதான அமெரிக்காவின் தாக்குதலுக்கு ரஷ்யா, ஈரான், மற்றும் ஐரோப்பிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

வெனிசுலாவில் இருந்து அமெரிக்காவுக்கு போதைப்பொருள் கடத்தப்படுவதாகவும், இதற்கு வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ உடந்தையாக இருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டி வந்தார்.

இதையடுத்து வெனிசுலா படகுகள் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தி வந்தது. வெனிசுலாவை சுற்றி கரீபியன் கடல்பகுதியில் அமெரிக்கா தனது படைகளை குவித்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அமெரிக்க ராணுவத்தினர் வெனிசுலாவின் தலைநகரான காரகாஸ்மற்றும்அதனைச்சுற்றியுள்ள பகுதிகளில் பெரிய அளவிலான வான்வழித் தாக்குதல் நடத்தினர்.

காரகாஸில் உள்ள முக்கிய ராணுவ தளமான பியூர்டே தியுனா, லா கார்லோட்டா விமான தளம் மற்றும் லா குவைரா துறைமுகம் உள்ளிட்ட பல ராணுவ மற்றும் உட்கட்டமைப்பு இடங்கள் தாக்கப்பட்டன.

இதன்பின், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட அறிவிப்பில், "அமெரிக்கா, வெனிசுலா மற்றும் அதன் தலைவர் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மீது ஒரு பெரிய அளவிலான தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

ஜனாதிபதி மதுரோவும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டு, நாட்டிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டு அமெரிக்கா காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கை அமெரிக்க சட்ட அமுலாக்கத் துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது" என்று தெரிவித்தார்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் இந்தத் தாக் குதலை வெனிசுலா மீதான ஆயுத மேந்திய ஆக்கிரமிப்பு என்று கண்டித்துள்ளது.

இது சர்வதேச சட்டங்களை மீறும் செயல் என்றும் தங்களின் அரசியல் சித்தாந்தத்திற்காக அமெரிக்கா இத்தகைய செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

வெனிசுலாவின் நெருங்கிய நட்பு நாடான ஈரான் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், இந்தத் தாக்குதல் வெனிசுலாவின் இறையாண்மையையும் அதன் பிராந்திய ஒருமைப்பாட்டையும் அப்பட்டமாக மீறும் செயல் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை அமெரிக்கா மீறியுள்ளது என தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலை பெரும் கவலையுடன் கவனித்து வருவதாகவும், நிலைமையை ஆராய அவசரக் குழுவைக் கூட்டியுள்ளதாகவும் ஜேர்மனி வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண மத்தியஸ்தம் செய்ய தயாராக உள்ளதாக ஸ்பெயின் அரசு அறிவித்துள்ளது.

மேலும் கொலம்பியா, கியூபா உள்ளிட்ட நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. இதற்கிடையே, வெனிசுலாவில் தற்போது தேசிய அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

---

### வெனிசுலா விவகாரம்

## இன்று அவசரமாக கூடுகிறது ஐ.நா பாதுகாப்புச் சபை

(காரகாஸ்)

வெனிசுலா நாட்டின் நீண்ட கால ஜனாதிபதியாக இருந்த நிக்கோலஸ் மதுரோவை, அமெரிக்கப் படைகள் அதிரடியாகத் தாக்கிப் பதவியிலிருந்து நீக்கியுள்ள சம்பவம் சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது தொடர்பாக விவாதிக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை இன்று அவசரமாகக் கூடவுள்ளது.

இதனிடையே, இந்த நடவடிக்கை குறித்து ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் அந்டோனியோ குட்டெரஸ் கடுமையாக விமர்சித்துள்ளார். இது ஒரு "ஆபத்தான முன்னுதாரணத்தை" ஏற்படுத்தியுள்ளதாக அவர் கவலை தெரிவித்துள்ளார்.

சர்வதேசச் சட்டங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சாசனத்தை அனைத்து நாடுகளும் மதிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு வெனிசுலா தூதுவர் சாமுவேல் மொன்காடா எழுதியுள்ள கடிதத்தில், அமெரிக்காவின் இந்தச் செயல் "தங்கள் நாட்டின் குடியாட்சியை அழித்து, இயற்கை வளங்களைச் சுரண்டுவதற்காக ஒரு பொம்மை அரசாங்கத்தை உருவாக்கும் காலனித்துவப் போர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இறையாண்மைகொண்ட ஒரு நாட்டின் மீது பலத்தை பிரயோகம் செய்வது ஐக் கிய நாடுகள் சாசனத்திற்கு எதிரானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பின்னணியில்கொலம்பியா விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து, ரஷ்யா மற்றும் சீனாவின் ஆதரவுடன் இந்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டம் நடைபெறவுள்ளது.

வெனிசுலாவுடனான பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், கடந்த ஒக்ரோபர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்குப் பின்னர் மூன்றாவது முறையாகப் பாதுகாப்பு சபை கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

---

### கென்யாவின் சொத்தாக திகழ்ந்த

## 'கிரெய்க்' யானை உயிரிழப்பு



(நெய்ரொபி)

கென்யாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள அம்போசெலி தேசிய பூங்காவில் வசித்து வந்த 'கிரெய்க்' என்ற யானை, நேற்று முன்தினம் காலை உயிரிழந்தது.

ஆபிரிக்காவிலேயே மிகப்பெரிய மற்றும் நீளமான தந்தங்களைக் கொண்ட மிகச் சில யானைகளில் இதுவும் ஒன்றாகும். இதன் ஒவ்வொரு தந்தமும் சுமார் 45 கிலோவுக்கும் அதிகமான எடை கொண்டவை என்பதுடன் தந்தங்கள் தரையைத் தொடும் அளவுக்கு மிக நீளமானவை.

வேட்டைக்காரர்களிடம் இருந்து இந்த அரிய வகை யானையைப் பாதுகாக்க, கென்ய வனவள திணைக்களம் மற்றும் மசாய் சமூகத்தினர் 24 மணிநேரமும் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த யானை "தந்தங்களுக்காக வேட்டையாடப்படும் அபாயத்தைத் தாண்டி, தனது வாழ்நாளை முழுமையாக வாழ்ந்து, இயற்கை மரணமடைந்தது வனப்பாதுகாப்புக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி" என கென்ய வனவள திணைக்களம் தெரிவித்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு
# 50 இலட்சம் ரூபா கொடுப்பனவு
### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

**(கொழும்பு)**

**டித்வா சூறாவளியினால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் 50 இலட்சம் ரூபா கொடுப்பனவை, ஜனவரி மாதத்தின் முதல் 10 நாட்களுக்குள் வழங்க ஆரம்பிக்கவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனர்த்தம் இடம்பெற்று ஒரு மாதம் கடப்பதற்கு முன்னர் சேதமடைந்த வீதிகளில் 99 சதவீதமானவற்றை புனரமைக்க முடிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். வீடுகளை முற்றாக இழந்தவர்கள் ஒரு வருடம் நிறைவடைவதற்குள் தமக்கான வீட்டை அமைத்துக் கொள்ள உதவுவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் விவசாயிகளும் தமக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான நஷ்டஈடு இதுவரை உரிய முறையில் கிடைக்கவில்லை என குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பித்தக்கது. (8)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1994- RC
நட்சத்திரம்: ரேவதி
8இல் செவ்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: LLB,Banker
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/13181

பிறப்பு:1982-இந்து
நட்சத்திரம்:உத்தரம்
12இல்செவ்
கி-பா- 31 1/4
உயரம்:5'9"
தகைமை/தொழில்-Diploma,TO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/11469

பிறப்பு:1984-இந்து
நட்சத்திரம்:பூசம்
கி-பா-52
12இல் செவ்
உயரம்:5"6'
தகைமை/தொழில்:Hotel Management, London
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/12493

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: சதயம்
2இல்சூரிசெவ்
கி-பா-10 1/2
உயரம்:5'10"
தகைமை/தொழில்: BSc(QS),QS
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/13284

பிறப்பு: 1997- இந்து
நட்சத்திரம்-உத்தரம்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Civil Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15562

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:2002-NRC
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: MBBS(3rd year)
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer
தொ.இ: G/15572

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்-ரோகினி
கி-பா-17 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: BBM,உத்தியோகம்
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/13569

பிறப்பு-1989-இந்து
நட்சத்திரம்- அச்சுவினி
கி.பா -32 ½
உயரம்-5"
தகைமை/தொழில்: BA, Home Maker
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்(வெளிநாடு)
தொ.இ: G/15574

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி-பா-32
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSC,MPhil, Researcher
எதிர்பார்ப்பு- உயர்பதவி
தொ.இ: G/13552

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்- மகம்
7இல்செவ்
கி.பா -17 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில் -சித்தமருத்துவர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/13588

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 512



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நிம்மதி

கடற்கரை ஓரமாக ஒரு பெரியவர் கையாலே மணலை கீறிக் கொண்டே உட்கார்ந்திருந்தார். என்னத்தையோ தேடிக் கொண்ப்பது மாதிரி தெரிந்தது! மெதுவாக அருகிலே போய், என்னத்தை தேடிக் கொண்டு இருக்கின்றீர்கள் என்று கேட்டேன். அவர் சாவகாசமாக என்னை நிமிர்ந்து பார்த்து "நிம்மதியை தேடிக்கொண்டிருக்கேன்!" என்றார். நான் ஒரு மாதிரி ஆகிவிட்டேன்! இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "சார் மணலிலே கிளிஞ்சல் தான் கிடைக்கும் நிம்மதி கிடைக் காது!" என்றேன்.சரி இன்றைக்கு வசமாக நம்மிடம் ஒரு ஆள் மாட்டிக்கொண்டார் என்று நினைத்து அவர் பக்கமாகப் போய் உட்கார்ந்துகொண்டு கதை சொல்ல ஆரம்பித்து விட்டேன்.

ஒரு பெரிய ராஜா இருந்தார். அவருக்கு எல்லா வசதியும் இருந்தது. இருந்தாலும் ஒரே ஒரு குறை. அது என்னன்னா நிம்மதி இல்லை என்ற குறை. அரண்மனையிலே தினமும் கலை நிகழ்ச்சி, நாட்டியம் எல்லாமும் நடந்துகொண்டுதான் இருந்தது! இருந்தாலும் நிம்மதி இல்லை.சரி! நிம்மதி. எங்கே கிடைக்கும்? என்று தேட ஆரம்பித்தார். உடனே அதற்கான முயற்சிகளிலே தீவிரமாக இறங்கினார். நாட்லே உள்ள தத்துவ மேதைகளையெல்லாம் கூட்டிக்கொண்டு வரச்சொன்னார். எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களை பார்த்து, நிம்மதி எங்கே இருக்கு?என்று விசாரித்தார். அவர்களுக்கு அது தெரிந்தால் ஏன் இப்படி ராஜா முன்னாடி வந்து நின்று கொண்டிருக்கப் போறார்கள்? ராஜாவின் கேள்விக்கு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரி விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார்கள்.எந்த பதிலும் ராஜாவுக்கு திருப்தியளிக் கக்கூடிய அளவுக்கு இல்லை! சரி போயிட்டு வாங்க! என்று அவர்களை யெல்லாம் அனுப்பி வைத்து விட்டார். ஒரு நாள் அவர் மாளிகை உப்பரிகையில் நின்றுகொண்டிருந்தார்.

அந்த சமயத்திலே தெருவிலே பிச்சைக்காரன் உல்லாசமாக பாடிக் கொண்டே போய்கொண்டிருந்தான். குரலிலே ரொம்ப சந்தோஷம். நடையிலே ஒரு மிடுக்கு. அவனிடம் கொஞ்சம் கூட கவலை இருப்பதாக தெரியவில்லை. உடனே ராஜா இதைப் பார்த்தார். ஏவலாளிகளை கைகாட்டி கூப்பிட்டார். உடனே ஓடிப்போய் அந்த பிச்சைக்காரனை இங்கே அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று உத்தரவு போட்டார். இவர்கள் உடனே ஓடிப்போய் அவனைக் கூப்பிட்டார்கள் "அரண்மனைக்கு வா" என்று. அரண்மனைக் குள்ளே அடியெடுத்து வைக்க மாட்டேன் என்றான். ராஜாவிடம் வந்து விடயத்தைச் சொன்னார்கள். அவருக்கு ரொம்ப ஆச்சரியம்! "இப்படியும் ஒரு ஆள் இருப்பானா?" என்று."சரி! அவன் என்னதான் சொல்கிறான்?" என்று விசாரித்தார். இவர்கள் மறுபடியும் தெருவுக்குப் போய் கேட்டார்கள். "என்னை பார்க்க வேண்டும் என்று ராஜா விருப்பப் பட்டால் அவரைத் தெருவுக்கு வரச் சொல்லுங் கள்!"என்று சொல்லி விட்டான். அதை வந்து ராஜாவிடம் சொன்னார்கள் . அவருக்கு கோபம் வரவில்லை. இவ்வளவு சுதந்திர உணர்வோடு இருக்கிற வன் சாதாரண ஆளாக இருக்க முடியாது என்று நினைத்தார். உடனே கிடுகிடு என்று இறங்கி தெருவுக்கு வந்தார். பிச்சைக்காரனிடம் போனார்.

"நீ கவலைப்படாமல் சந்தோஷமாக பாடிகொண்டே போறியே அது எப்படி முடியுது உன்னாலே?" என்று கேட்டார்.ஏன் அப்படி கேட் கின்றீர்கள் என்று கேட்டான் அவன். அதற்கில்லை. எனக்கு அரண்மனை யிலே எல்லா சுகபோகங்களும் இருக்கு. இருந்தாலும் நிம்மதி இல்லை ! இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த தேசத்திலே உள்ள அறிஞர்களையெல்லாம் கூப்பிட்டுக் கேட்டுப்பார்த்தேன். அவர்களுக்கும் தெரியவில்லை. உன்னை கேட்டால் தெரியும் என்றுநினைத்தேன். அதனாலே தான் சந்திப்பதற்கு ஆசைப்பட்டேன். ஆனா ல் நீ வரமாட்டேன் என்று விட்டாயே என்றார். பிச்சைக்காரன் கடகட என்று சிரிக்க ஆரம்பித்து விட்டான். மகிழ்ச்சிக்கும் உங்களுக்கும் தடையாக இருக்கிறது இந்த மாளிகைதான்.இதை விட்டு விட்டு வெளியே வந்துவிட்டால் நிம்மதி தேடிக்கொண்டு வந்து விடும் என்றான்..நான் அரசன். எனக்கென கடமைகள் இருக்கு. அதையெல்லாம் விட்டுவிட்டு எப்படி வரமுடியும்?"என்றார் ராஜா.

இரண்டும் ஒரே நேரத்திலே கிடைக்கணும் என்பது முடியாத காரியம். உங்கள் சுகபோகத்துக்கு விலையாகத்தான் உங்கள் நிம்மதியை கொடுத்திருக்கின்றீர்கள். என்னைப் பாருங்கள்! என்னிடம் எதுவும் இல்லே! அதனாலே எதுவும் போயிடுமோ என்கின்ற பயமும் இல்லை. நிம்மதியாக இருக் கேன்!"என்றான் அவன். உடனே ராஜா சந்தோஷப்பட்டு தன்னுடைய மேலங்கியை எடுத்து அவனுக்குப் பரிசு கொடுத்தார். அவன் சிரித்துக் கொண்டே அதை வாங்க மாட்டேன் என்று விட்டான். இதை நீங்கள் எனக்குக் கொடுப்பதனாலே எந்தப் பயனும் இல்லை. அதே நேரத்திலே அதை வாங்கிவிட்டேன் என்றால் அடுத்த விநாடியிலேயிருந்து அதை எப்படி காப்பாற்றுவது என்கின்ற கவலை எனக்கு வந்துவிடும். அப்புறம் தூக்கம்வராது. நிம்மதி போயிடும்! என்று சொல்லிவிட்டு அவன் பாட்டுக்கு சந்தோஷமாக பாடிக்கொண்டே போய்விட்டான். நிம்மதி எங்கே இருக்கின் றது என்பதையும் தெரிந்துகொண்டார் ராஜா. அந்த இடத்திற்கு தன்னாலே போகமுடியாதுஎன்பதையும் புரிந்து கொண்டார்.

இப்படி இந்த கதையை கடற்கரையிலே மணலை கீறிக் கொண்டே உட்கார்ந்திருந்த அந்த பெரியவரிடம் சொல்லி முடித்தேன். அவர் முகத்திலே ஒரு தெளிவு தெரிந்தது. என்னை நிமிர்ந்து பார்த்தார். ரொம்ப நன்றி சார்! இப்போது எனக்கு தெரிந்து விட்டது நிம்மதி வேண்டும் என்றால் அதற்கு என்ன செய்யவேண்டும் என்று இப்போது நன்றாக புரிந்து கொண்டேன் என்றார். என்ன புரிந்து கொண்டீர்கள் என்று கேட்டேன். இனிமேல் கடற்கரைக்கு வந்தால் உங்கள் கண்ணிலே படாத இடமாக பார்த்து உட்கார வேண்டும் என்று புரிந்து கொண்டேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## முடக்கு வாதத்தை கட்டுப்படுத்தும் இயற்கை வழிமுறைகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

முடக்கு வாதத்தை எப்படி எதிர் கொள்ள வேண்டும், எவ்வாறு கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கலாம் என்று நோக்கில், பல நோய்களின் கூட்டு தான் முடக்கு வாதம். இது தனிய மூட்டில் வருவது என்று கருதக்கூடாது. மூட்டுகள், தசை நார்கள், திசுக்கள், தசைகள் இவை எல்லாவற்றுடனும் தொடர்புடையது முடக்குவாதம். எனவே வெறும் என்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. முடக்குவாதம் கைகளில் வந்தால் கைகள், மணிக்கட்டு போன்றவற்றை பாதித்து கைகளை மடக்கவோ, சூழற்றவோ முடியாது.


அதேபோல் கால்களில் ஏற்பட்டால் நடக்கவே கஷ்டமாக இருக்கும். முடக்குவாத நோய்களை கட்டுக்குள் வைத்திருக்க முடியும். வாழ்வியல் முறை சரியாகவும், சரியான உணவுப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றின் மூலம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

நீரிழிவு போன்று வாழ்நாள் முழுவதும் மருந்து, மாத்திரைகள் எடுக்க வேண்டியதில்லை. சரியான முறையில் பராமரித்து வந்தால் மூட்டுக்களில் அழற்சி, வீக்கம் குறைய மருந்து, மாத்திரைகளை நிறுத்திக் கொள்ள முடியும். இரண்டாவதாக ஆரம்ப நிலையில் கண்டு பிடித்தாலும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும். பெரும்பாலும் நடுத்தர வயதுடைய பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

இதற்கு சத்தான உணவுகளும், வலி, வீக்கத்தைக் குறைக்கக்கூடிய உணவுகளுக்கும் முக்கியத்துவமுண்டு. வலி, வீக்கத்தை குறைக்கும் உணவுகளில் ஒமேகா-3 உணவுகள் முக்கிய இடம் வகிக்கின்றன. மீன், உறலி மீன், நெத்தலிமீன் போன்றவற்றில் அதிகமான ஒமேகா-3, கொழுப்பு அமிலங்கள் உண்டு.

இதனால் தான் சித்த மருத்துவத்தில் இவை, பத்திய உணவாகப் பரிந்துரைக்கப்படுகிறது. இதைவிட பாதாம் பருப்பு, பிஸ்தா பருப்பு போன்றவற்றையும் பயன் படுத்தலாம்.

முடக்குவாதம் உள்ளவர்கட்கு



என்பு அடர்த்தி குறைவாக இருக்கும்.இதனால் தான் முடக்குவாதம் உள்ளவர்கள் மூட்டுக்களில் வலி, அழற்சி குறைந்தபின்பு உடற்பயிற்சியாக நடைப் பயிற்சியை மேற்கொள்ளலாம். தினமும் முப்பது நிமிட நேரங்கள் நடந்தால் போதுமானது. நடைப்பயிற்சி மேற் கொள்பவர்களுக்கு என்பு அடர்த்தி குறைய வாய்ப்பில்லை.

அத்துடன் கல்சியம் உள்ள உணவுகள் பால், முட்டை, எல்லா வகையான பருப்புகள், பச்சை இலை, காய்கள் போன்றவற்றை சாப்பிடும் போது இரும்புச் சத்து சேர்த்துக்கிடைக்கக்கூடியதாக இருக்கும். இத்துடன் நீங்கள் எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தை, தோடம் பழச்சாறுகள் சேர்த்து அருந்தும் போது மேற்கூறிய சத்துக்கள் இலகுவாக அகத்துறிஞ்சப்படக்கூடியதாக இருக்கும். கரட், மூலாம்பழம், கொய்யாப்பழம், நெல்லிக்காய், பப்பாளிப்பழம், மூட்டுக்களில் ஏற்படும் வீக்கம், அழற்சியை குறைக்கும் தன்மை மேற்படி காய், பழங்களுக்கு உண்டு.

இப் பழங்களைக் கட்டாயமாக முடக்கு வாத நோயாளிகள் சாப்பிட வேண்டும். மூட்டுக்களில் ஏற்படும் வீக்க அணுக்களை குறைக்கும் ஆற்றல் உண்டு. அடுத்து முழுத் தானியங்கள் அவசியம். ஏனெனில் முழுத்தானியங்களில் செலானியம் சத்து உண்டு. இதுவும் அழற்சியை குறைக்கும் ஆற்றல் உண்டு. மூட்டு வலியைக் குறைக்கும் உணவில் கானாங்கெளுத்தி போன்ற ஒமேகா-3 கொழுப்பமிலமுள்ள மீனும் சிறந்தது.

முழுத்தானியங்களில் ஓட்ஸ், பார்லி. கம்பு போன்றவை சிறந்த உணவுகளாகும். சித்த மருத்துவத்தில் மஞ்சள் சேர்ந்த மஞ்சள் பற்பம், பெரிய மஞ்சள் எண்ணெய் என மஞ்சள் சேர்ந்த சேர்மானங்கள் உள், வெளி மருந்துகளில் முக்கியமாகச் சேர்க்கப்படுகிறது. மஞ்சளில் குர்குமின் எனும் வேதியற்பொருள் உள்ளது. இது அதன் சக்தி வாய்ந்த, அழற்சி எதிர்ப்பு மற்றும் ஆக்ஸிஜனேற்ற விளைவுகளுக்கு பெயர் பெற்ற ஒரு பொருளாகும். குர்குமின் உடலில் ஏற்படும் அழற்சிப்பாதைகளைத் தடுக்கிறது.

கீல்வாதத்துடன் தொடர்புடைய வீக்கம் மற்றும் வலியைக் குறைக்கிறது. மஞ்சளை உணவுகளில் சேர்ப்பது அல்லது ஒரு துணைப் பொருளாக உட்கொள்வது கீல்வாத அறிகுறிகளை திறம்பட நிர் வகிக்க உதவுகிறது. இஞ்சி யானது பல்வேறு அழற்சி நிலை களுக்கு இயற்கையான தீர்வாக பயன் படுத்தலாம்.

இஞ்சியை தொடர்ந்து உட்கொள்வது மூட்டுக்களில் வீக்கம், மற்றும் வலியை குறைக்க உதவும். உள்ளியில் சல்பர் சேர்மானங்கள் உள்ளன. அவை அழற்சி எதிர்ப்பு பண்புகளைக் கொண்டது. இந்தச் சத்து உடலில் உள்ள அழற்சி நொதியங்களின் செயற்பாட்டைத் தடுக்க உதவுகிறது. உங்கள் உணவில் உள்ளியைச் சேர்க்கும் போது மூட்டு வலியுடன் தொடர்புடைய வீக்கம் மற்றும் வலியைக் குறைக்க உதவுகிறது. க்ரீன் டீயில் பாலிபினால்கள், தாதுக்கள், விற்றமின்கள் நிறைந்துள்ளதால் அழற்சியைக் குறைக்க உதவும். இதில் ஆன்டி ஆக்ஸிடன்களும் காணப்படுகிறது.

எனவே க்ரீன் டீயும் அருந்தலாம். மேற்படி உணவுகள் மூலிகைகள், பயிற்சிகளை மேற்கொள்ளும் போது முடக்குவாதத்தை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியும்.

# இராசிபலன்

05.01.2026
மார்கழி 21, திங்கட்கிழமை
துதியை பிற்பகல் 01 .32 மணிவரை
பூசம் பிற்பகல் 05.05 மணிவரை

சுபநேரம் -12.31-02.01 மணிவரை
இராகுகாலம் 08.01-09.31 மணிவரை

சந்திராஷ்டமம்- மூலம், பூராடம்.

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**துலாம்** பொது வாழ்வில் புகழ் கூடும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், அருமையான நாள்.

**மகரம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய் தொழில் மேன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** அரசு வழியில் அனுகூலமுண்டு, நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம்.

**சிம்மம்** திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப் படையலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற கடின உழைப்பு தேவை.

**விருச்சிகம்** எதிர்பார்த்த காரியமொன்று இன்று காலையிலேயே நடைபெறலாம், வியக்கும் செய்திகள் வீடுவந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொன்னான நாள், பேச்சில் கனிவு பிறக்கும்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், நீங்கள் பெரிதாக மதித்த ஒருவர் அர்ப்பத்தனமாக நடந்து கொள்ளலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மீனம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வியாபார விருத்தியுண்டு, பிறர் உதவியுண்டு.

நம் கவனக் குறைவுதான் அதிக தோல்விகளை ஏற்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 947





யானைத் துதிக்கையை யொத்த நீண்ட கைகள், இந்திரனுடைய வஜ்ராயுதத் தைப் போன்ற வலிமை யுள்ள கைகள். போர்க்க ளத்தில் ஆயிரமாயிரம் பகைவர்களை வெட்டி வீழ்த்திய கைகள், சோழ சக்கரவர்த்திகளின் சிரத்தில் மணி மகுடத்தை வைத்து நிலை நாட்டிவரும் கைகள்.

ஆனாலும் அதை யெல்லாம் இன்று நினைத் துப் பார்ப்பாரில்லை. நேற் றுப் பிறந்த பிள்ளைகள் தங்களைக் 'கிழடு' என்று சொல்லி ஏளனம் செய்யும் காலம் வந்து விட்டது. தாங் களோ மந்திரத்தால் கட்டு ண்ட சர்ப்பராஜனைப் போல் சோழ குலத்தாரிடம் கொண்ட பக்திக்குக் கட்டுப்பட்டுச் சும்மா இருக்க வேண்டியி ருக்கிறது.

என்னுடைய கரங்கள் வளையல் அணிந்த மென் மையான கரங்கள்தான். ஆனா லும் வீராதி வீரராகிய தங் களை அக்கினி சாட்சியாகக் கைப்பிடித்த காரணத்தினால் எனது கைகளுக்கும் சிறிது சக்தி ஏற்பட்டிருக்கிறது. என் கற்பைக் காத்துக் கொள் வதற்கும் என் கணவரின் மரி யாதையை நிலை நிறுத்துவ தற்கும் அவசியம் ஏற்படுமா னால் என் கைகளுக்கும் கத்தி எடுக்கும் வலிமை உண்டாகி விடும்.

இதோ பாருங்கள்!" என்று நந்தினி கூறிவிட்டு, மஞ் சத்துக்கு அடியிலிருந்த பெட்டியை வெளிப்புறமாக நகர்த்தினாள்.

பெட்டியைத் திறந்து அதன் மேற்புறத்தில் கிடந்த ஆடைகளை அப்பு றப்படுத்தினாள். அடியில் தகதகவென்று பிரகாசித்துக் கொண்டிருந்த நீண்ட வாளை ஒரு கையினால் அலட்சி யமாக எடுத்துத் தலைக்கு மேலே தூக்கிப்பிடித்தாள்.

பழுவேட்டரையர் அதைப் பார்த்த வண்ணமாகச் சிறிது நேரம் பிரமித்துப் போய் நின்றார். பின்னர், "இந்த பெட்டிக்குள்ளே இந்த வாள் எத்தனை காலமாக இருக்கி றது? உன் ஆடை ஆபரணங் களை வைத்திருப்பதாகவல் லவோ நினைத்தேன்?" என் றார்.

நந்தினி வாளைப் பெட்டி யில் திரும்ப வைத்துவிட்டு, "ஆம் என் ஆடை ஆபரணங் களை இந்தப் பெட்டியிலே தான் வைத்திருக்கிறேன். என் ஆபரணங்களுக்குள்ளே மிக முக்கியமான ஆபரணம் இந்த வாள். என் கற்பையும் என் கணவருடைய கௌர வத்தையும் பாதுகாப்பதற்கு ரியது" என்றாள்.

"ஆனால் இதை நீ உப யோகப்படுத்துவதற்கு அவசி யம் ஒன்றும் ஏற்படப் போவ தில்லை நான் ஒருவன் உயி ரோடிருக்கும் வரையில்!"

"அதனாலேதான் இந்த வாளை நான் வெளியில் எடுப்பதில்லை. ஈழ நாட் டிலிருந்து வேங்கி நாடு வரையில் சோழ ராஜ்யத் தைப் பாதுகாத்துக் கொண் டிருக்கும் தங்கள் தோள் வலிமையால் தங்கள் கௌர வத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதா? அல்லது பேதை யாகிய என்னைத்தான் பாது காக்க முடியாதா? என்றா லும், முக்கியமான ராஜரீக காரியங்களில் ஈடுபட்டிருக் கும் தாங்கள் எப்போதும் என்னைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்க முடியாது. தங்களைப் பிரிந்திருக்கும் நேரங்களில் என்னை நான் பாதுகாத்துக் கொள்ள ஆயத் தமாய் இருக்க வேண்டும் அல்லவா?"

"தேவி! அதற்கு அவசி யம் என்ன? போனது போக ட்டும், இனி நான் உன்னைப் பிரிந்திருக்கப் போவதே இல்லை."

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## பேராசை கொண்ட செட்டி



ஒரு ஊரில் ஒரு செட்டி இருந்தார். அவர் பணத் திற்கு மேல் பணம் சம் பாதிக்கும் ஆர்வம் கொண் டவர்.

தானும் உண்ணார் தர்ம மும் செய்யார். ஒரு நாள் தனது வீட்டிற்கு அருகில் உள்ள தென்னை மரத்தில் தேங்காய் பறிப்பதற்கு மரம் ஏற ஒருவரைக் கேட்ட போது அவர் அதிக கூலி தரும்படி கேட்டார். அதற்கு மறுத்த செட்டி தன் மரத் தில் தேங்காய் பறிக்க ஏறி னான். செட்டிக்கு மரம் ஏறிப் பழக்கம் இல்லை. ஏறும் போது கால் சறுக்கியது.

அப்போது அவர் ஒரு தென்னோலையில் தொங் கிக் கொண்டு என்னைக் காப்பாற்றுங்கள் என்று சத் தம் போட்டார் அப் போது அந்த வழியில் ஒருவன் யானைக்கு மேல் ஏறி வந் தான். அவன் செட்டியைக் காப்பாற்ற யானையின் மேல் ஏறி அவரது காலைப் பிடித்தான். அப்போது யானை விலகிச் சென்றது. யானையில் வந்தவன் செட் டியின் காலைப் பிடித்து தொங்கிக் கொண்டு செட் டியைப் பார்த்து கையை விட்டுவிடாதீர்கள் யாரும் காப்பாற்ற வருவார்கள்.

கீழே வந்த பின் உங்க ளுக்கு பத்தாயிரம் ரூபாய் தருவேன் என்று கூறினான். பணம் என்றவுடன் செட்டி தன்னை மறந்து தன்னிட முள்ள பணத்தையும் வரப் போகும் பணத்தையும் சேர்த்து கணக்குப் பார்த்து கையை விரித்தான். அப் போது இருவரும் கீழே விழுந்தார்கள்.

வை. தங்கமயில்,
கும்பவாழி, உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்பது ஒரு கல்விச்சாலை, அங்கு ஒவ்வொரு சூழ்நிலையும் நமக்கு நல்லதொரு பாடத்தையே கற்பிக்கிறது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திமுகவின் இந்துமத எதிர்ப்பு எதிர்வரும் தேர்தலில் மக்கள் தீர்ப்பு

ஒரு காலத்தில் தமிழகத்தில் ஆரிய எதிர்ப்புப் போராட்டம் திராவிடர்களின் முன்னேற்றமாகக் கருதப்பட்டது.

அதன் காரணமாக பிராமணர்களை எதிர்ப்பதற்காக இந்து சமயத்தை தனித்து வஞ்சிக்கின்ற செயலில் ஈ.வே.ரா பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோர் தீவிரம் காட்டினர்.

அன்றைய சூழலில் தமிழகத்தை வதைத்துக் கொண்டிருந்த சாதியமும் பார்ப்பனர்களின் ஆதிக்கமும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் போக்கை நியாயப்படுத்தின.

ஆம், ஒரு கூட்டத்தில் உரையாற்றிய ஈ.வே.ரா.பெரியார்; பார்ப்பனரையும் பாம்பையும் கண்டால் முதலில் பார்ப்பனரையே அடிக்க வேண்டும் எனப் பகிரங்கமாகக் கூறியிருந்தார். தவிர, நாத்திகக் கொள்கையை வரித்துக் கட்டிய திமுகவினர் கோயில்களையும் வழிபாட்டையும் கடுமையாகச் சாடினர்.

இருந்தும் அதுகுறித்து தமிழக மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. அதற்குப் பிராமண ஆதிக்கம் உச்சம் பெற்றிருந்தமையும் காரணமாயிற்று.

எனினும் அதிமுகவின் ஸ்தாபகர் எம்.ஜி.ஆர் இந்து ஆலயங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டிருந்தார். அதனால் அவர் திருமுருக.கிருபானந்த வாரியார் போன்ற சைவ சமயத்தின் பிரதானிகளை முதன்மைப்படுத்தினார்.

அதேவேளை நாத்திகக் கொள்கையிலும் பிராமணிய எதிர்ப்பிலும் கலைஞர் கருணாநிதி உறுதியாக இருந்தாராயினும் இந்து மக்களை நிந்திக்குமளவுக்கு அவர் ஆட்சி செய்யவில்லை. ஆனால் தமிழகத்தின் முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஆட்சியில் இந்து சமயம் மிகமோசமாக நிந்திக்கப்படுகிறது.

இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிகம் ஈடுபடவில்லையாயினும் அவரின் மகனும் துணை முதல்வருமாகிய உதயநிதி ஸ்டாலின் வெளிப்படையாக இந்து மதத்துக்கு எதிரான கருத்துக்களைக் கொட்டித் தீர்த்து வருகிறார்.

சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டுமென அவர் ஆற்றிய உரை மிகப்பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது.

இருந்தும் உதயநிதி ஸ்டாலினின் இந்து சமய எதிர்ப்பு உச்சமடைந்து, நான் ஒரு கிறிஸ்தவன் எனப் பகிரங்கமாகக் கூறினார்.

இவ்வாறு தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி கூறியதால் உற்சாகமடைந்த பட்டிமன்றப் பேச்சாளர் லியோனி இந்து சமயத்தை மிக மோசமாக – கீழ்த்தரமாக விமர்சித்தார்.

இது ஒருபுறம் நடக்க, இப்போது இந்து அறநெறித்துறை அமைச்சராக இருக்கின்ற சேகர் பாவு இந்துக்களை ஒருமையில் பேசியதுடன் மிகவும் கேவலமான வார்த்தைகளைக் கொட்டித்தீர்த்தார். இதனால் தமிழகம் இப்போது கொதித்தெழுந்துள்ளது.

ஆம், திமுகவின் இந்துமத எதிர்ப்பு அப்பெரும் கட்சியை அரியணையிலிருந்து முற்றாக இறக்கப்போகிறது என்று அரசியல் நோக்கர்கள் விமர்சிக்கும் அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

ஆம் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் திமுகவின் இந்து மத எதிர்ப்புக்கான தீர்ப்பை தமிழக மக்கள் வழங்குவர் என நம்பலாம்.

# வெனிசுலா தொடர்பில் அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கை தவறு

## கண்டன அறிக்கை வெளியிட்டது ஜே.வி.பி

(கொழும்பு)

அமெரிக்காவினால் வெனிசுலா மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் அதன் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, அவரது மனைவி ஆகியோர் அமெரிக்கப் படைகளால் சிறைப்பிடிக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஜேவிபி விசேட ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

சுதந்திரமான, இறைமையுள்ள நாடான வெனிசுலாவுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கு மக்களின் வாக்குகளால்தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியைக் கடத்திச் சென்று, வெனிசுலாவுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட இராணுவ ரீதியிலான ஆக்கிரமிப்புத் தலையீட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

உலகின் எந்தவொரு சுதந்திர, இறைமையுள்ள நாட்டைப் போலவே வெனிசுலாவினதும் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் மற்றும் ஆட்சியாளர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும் இறைமை அந்நாட்டு மக்களுக்கே உரியது. அதனை மீறுவதற்கு எந்தவொரு வல்லரசுக்கும் உரிமை இல்லை.

நவீன சமூகமும் அரச நிர்வாகமும் மிகவும் பண்பட்டதாக இருக்க வேண்டும் என்பது பொதுவான நம்பிக்கையாகும். ஜனநாயகம், மனித உரிமைகள், நாடுகளின் சுதந்திரம் மற்றும் இறைமை என்பன உலகமே ஏற்றுக்கொள்ளும் கோட்பாடுகளாகும்.

எந்தக் காரணத்திற்காகவும் அவற்றை மீறி, நாடுகளுக்குள் இராணுவத் தலையீடுகள் அல்லது ஆக்கிரமிப்புகளை மேற்கொள்வது நவீன நாகரிக உலகில் நியாயமானதல்ல.

இத்தகைய சூழ்நிலையில், அமெரிக்காவினால் வெனிசுலாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பலவந்தமான இராணுவத் தலையீட்டை உலகில் எவரும் அங்கீகரிக்கமாட்டார்கள் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

எனவே, அமெரிக்கா வெனிசுலாவுக்கு எதிராக மேற்கொண்ட இந்த இராணுவ ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் மக்கள் விடுதலை முன்னணியினரான நாம், வெனிசுலாவின் இறைமை மற்றும் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்கின்றோம் என்றுள்ளது. (ந-7)

ரூ. 4 கோடிக்கும் அதிக பெறுமதியான

## தங்க நகைகளுடன் விமானப் பணிப்பெண் கைது

4 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய தங்கநகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுக்களை சட்டவிரோதமாக நாட்டிற்குக் கொண்டுவந்த தனியார் விமான நிறுவனத்தின் பெண் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை (04) காலை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால், குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொழும்புப் பகுதியைச் சேர்ந்த 27 வயது இளம் விமானப் பணிப்பெண் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

நேற்று அதிகாலை 12.00 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு விமானம் வந்த போதே அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கிலோகிராம் 163 கிராம் நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுகளை மறைத்து வைத்துக் கொண்டு கட்டு நாயக்க விமான நிலைய வருகை முனையத்திலிருந்து வெளியேற முயன்ற போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில், கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## கண்டி நீதிமன்றில் மோ. சைக்கிள் திருட்டு

### நான்கு இளைஞர்கள் கைது

அண்மைய இயற்கை அனர்த்தத்தின் போது கண்டி நீதிமன்றம் வெள்ளத்தில்மூழ்கியிருந்த நிலையில் நீதிமன்ற வளாகத்திலிருந்து இரண்டு அதிவேக மோட்டார் சைக்கிள்களைத் திருடிய குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், நீதிமன்ற வழக்குகளின் சான்றுப் பொருட்களாக வைக்கப்பட்டிருந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதால் கண்டி நீதிமன்ற வளாகம் வெள்ளத்தில் மூழ்கியிருந்தமையைத் தமக்குச் சாதகமாக்கி இந்தத் திருட்டுச் சம்பவம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற வளாகத்தின் பின்புறப் பகுதியிலிருந்து 1000 சீசீ மற்றும் 600 சீசீ எஞ்சின் திறன் கொண்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களையே சந்தேக நபர்கள் திருடிச் சென்றுள்ளதாகக் கண்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கண்டி நீதிமன்றப் பதிவாளர் அளித்த முறைப்பாட்டையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து,

கண்டி, கெட்டம்பே, கிரிபத்கும்புர மற்றும் மாவனல்லை ஆகிய பகுதிகளில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந-7)

பாடப்புத்தக சர்ச்சை

## பிரதமர் உடன் பதவி துறப்பதுவே உசிதம்

### நாமல் எம்.பி தெரிவிப்பு

தரம் 6 மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் காணப்பட்ட தவறுகள் தொடர்பில் அமைச்சு அதிகாரி ஒருவர் பதவி விலகுவதை விட, கல்வி அமைச்சராக இருக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரிய அதற்குப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் பதவி விலகியுள்ளமையைச் சுட்டிக்காட்டிய அவர், அந்தக் குழுவின் தலைவரை நியமித்தவர் பிரதமர் என்பதால், அதற்கு அவரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

பாடப்புத்தக விவகாரம் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதை விமர்சித்த நாமல் எம்.பி, அமைச்சிற்கு வெளியே உள்ள ஒருவரால் இந்தப் புத்தகத்தை அச்சிட முடியாது என்றும், அமைச்சிற்குள்ளேயே இது அச்சிடப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறி முறைப்பாடு செய்வது வேடிக்கையானது என்றார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2026



**நியாயமான துலாம் இராசியினரே!**

**நியாயம் தர்மத்தில் நம்பிக்கை நிறைந்த துலாம் இராசியினருக்கு 2026 ஆம் ஆண்டு நல்ல முன்னேற்றமான பலன்கள் ஏற்படும் ஆண்டாக அமைய நல் வாழ்த்துக்கள்.**

இந்த ஆண்டில் நீங்கள் எண்ணியது ஈடேறும். உங்களை சாதாரணமாக நினைத்தவர்கள் கூட உங்களது திறமைகளை உணர்வார்கள். வாழ்க்கையை நகர்த்துவதில் இருந்த சிரமங்கள் சீராகும். நிம்மதியாக இருப்பீர்கள். சொல்வாக்கால் மற்றவர்களால் மதித்திடக் கூடிய நிலையை அடைவீரகள்.

**குருவின் சஞ்சார பலன்கள்:**

துலாம் இராசிக்கு 3,6 ஆம் அதிபதியான குரு பகவான் ஆண்டின் தொடக்கத்தில் 9ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். 2.6. 2026 முதல் 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். முன்னேற்றமான மாற்றங்கள் ஏற்படும். இழந்த அனைத்து இன்பங்களையும் மீட்டுப் பெறப் போகிறீர்கள். உங்களின் கற்பனைகள் கனவுகள் நனவாகும். இளமையாக பரபரப்பாகவும், சுறுசுறுப்பாக செயற்படுவீரகள்.

துக்கத்தால் தூக்கமின்றி தவித்தவர்களுக்கு நிம்மதியான தூக்கம் வரும். வழக்குகளில் தீர்ப்பு உங்களுக்கு சாதகமாகும். பெண்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் பாதுகாப்பு கூடும் அரசியல் பிரமுகர்களுக்கு தலைமையிட ஆதரவு உண்டு. பொருளாதார ஏற்றத் தாழ்வு அகலும். வட்டிக்கு வட்டி கட்டிய நிலைமாறும். வியாபாரத்தில் நிலவிய மந்த நிலை நீங்கி தொழிலில் இலாபம் அதிகரிக்கும்.

சிலருக்கு தாயார் மூலம் திரண்ட சொத்து அல்லது பெரிய அதிஷ்ட தொகை கிடைக்கும். புதிய சொத்துக்கள் வாங்க ஏற்ற காலம். குல தெய்வம் மற்றும் முன்னோர்களின் நல்லாசிகள் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும். சொத்துக்கள், அழகு ஆடம்பரப் பொருட்களின் சேர்க்கை அதிகரிக்கும்.

சுப விசேடங்கள் நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த மந்த நிலை மாறி படிப்பில் ஆர்வம் உண்டாகும். தாயின் உடல் நிலையில் நல்ல மாற்றம் உண்டாகும்.

**சனியின் சஞ்சார பலன்கள்:**

துலாம் இராசிக்கு 4,5ஆம் அதிபதியான சனி பகவான் ஆண்டு முழுவதும் 6ஆம் மிடமான ருண, ரோக சத்ரு ஸ்தானத்தில் சஞ்சரிப்பார். நீண்ட நாள் முயற்சிகள் வெற்றியைத் தரும். பணிச் சுமை அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்த்து மேல் அதிகாரிகளின் சொற்படி நடப்பது முன்னேற்றத்துக்கு உதவும். தொழிலில் சீரான முன்னேற்றம் இருக்கும். ஊர்

## நீங்கள் எண்ணியது ஈடேறும்!

மாற்றம், நாடு மாற்றம் வரலாம். தம்பதிகள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வதால் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். திருமண வாய்ப்பு கூடி வரும். சிலருக்கு மறு விவாகம் நடக்கும். அரசியல் பிரமுகர்களின் பொறுப்புகள் கூடும். மாணவர்கள் அக்கறையாக படிப்பார்கள். உடன் பிறந்த சகோதர, சகோதரிகளின் சுப விசேடங்கள் நடக்கும். தொலைந்த, கைவிட்டுப் போன பொருட்கள் கிடைக்கும்.

அதிக வேலைப் பளுவால் உரிய நேரத்தில் சாப்பிட முடியாமல் அல்சர் போன்ற உடல் உபாதைகள் வரலாம் என்பதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. 6 இல் உள்ள சனிபகவான் கடன் சார்ந்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பார்.

எனினும் எல்லா விடயத்தையும் பொறுப்புடன் பொறுமையாக கையாள வேண்டும். பணம், கொடுக்கல் வாங்கல் விடயங்களில் யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம்.

**ராகு கேதுவின் சஞ்சார பலன்கள்:**

தற்போது கோட்சாரத்தில் துலாம் இராசிக்கு 5 ஆம் இடத்தில் ராகுவும் 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். 5.12. 2026 முதல் சுக ஸ்தானத்தில் ராகுவும் தொழில் ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். ஐந்தில் உள்ள ராகு தொழில், உத்தியோகத்தில் குறுக்கு சிந்தனையைப் புகுத்துவார். பங்குச் சந்தை முதலீடுகளால் உபரி வருமானம் உண்டாகும். பங்குச் சந்தை ஆதாயம் இரட்டிப்பாகும். அதிஷ்ட வாய்ப்புகள் தேடி வரும்.

வெளிநாட்டு முயற்சிகள் பலன் தரும். விரும்பிய உயர் கல்வி வாய்ப்பு சிறு தடைக்குப் பிறகு சாதகமாகும். பிள்ளைகளின் மனதைப் புரிந்து கொள்ளுவது சற்று கடினமாக இருக்கும். சிறு சிறு உடல் உபாதைகள் வைத்தியத்தில் கட்டுப்படும். பொருளாதார நிலையில் நல்ல நிரந்தரமான உயர்வு ஏற்படும்.

பண வரவுகள் தாராளமாக இருந்தாலும் தவிர்க்க முடியாத விரயங்களை சந்திக்க நேரும். தாய் வழிச் சொத்தை பிரிப்பதில் இருந்த குறுக்கீடுகள் அகலும்.

அரசியல்வாதிகள் மௌனமாக இருந்தால் மன நிம்மதி நிலைக்கும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் மும்முரமாக ஈடுபடுவீர்கள். எதிர்ப்புகள் விலகும். மருமகனால் ஏற்பட்ட சங்கடங்கள் அகலும். வம்பு, வழக்குகள் சாதகமாகும். பிறரின் பொறாமை குணத்தால் கண் திருஷ்டி உருவாகலாம். தாய்மாமன் மூலம் அனுகூலம் கிடைக்கும். வீடு, மனை சம்பந்தப்பட்ட விடயங்களில் இருந்து வந்த




சுணக்க நிலை மாறும்.

**சித்திரை 3,4**

காரிய தடைகள் நீங்கும் வருடம். கிரகங்களின் நிலவரம் சித்திரை நட்சத்திரத்திற்கு மிகச் சாதமாக உள்ளது. கவலைகள் அகலும் உற்சாகமாக, ஆரோக்கியமாக இருப்பீரகள்.

எதிர்மறை எண்ணங்கள் விலகும். பிள்ளைகளால் ஏற்பட்ட மன உளைச்சல் நீங்கி நிம்மதி பிறக்கும். வேலைப் பளு இருந்தாலும் எல்லா பணிகளையும் திறம்படச் செய்து முடிப்பார்கள். எதிர்பார்த்த அதிகாரமிக்க பதவிகளைப் பெறுவீர்கள். பணவரவு திருப்தி தரும். புதிய முதலீடுகள் செய்வீரகள். தடைப்பட்டிருந்த தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். வாடிக்கையாளர் எண்ணிக்கை கூடும். திட்டமிட்டு செயற்படுவதால் காரிய ஜெயம் உண்டாகும்.

நோய் பாதிப்புகள் குறைய த் தொடங்கும். இழுபறியான பிரச்சினைகளில் இருந்து மீண்டு வருவீர்கள். பெண்கள் வேலை பார்க்கும் இடத்தை மாற்றலாம். விவாகரத்து வரை சென்ற வழக்குகள் திரும்பப் பெறப் படும். திருமண விடயத்தில் வேண்டாம் என்று ஒதுக்கிய வரனே சாதகமாக முடியும். எந்தச் செயலையும் இடம் பொருள் ஏவல் பார்த்து நடத்த வேண்டும். யாரையும் பகைக்க கூடாது. முருகனை வழிபடு வதால் இன்பங்கள் கூடும்.

**சுவாதி:-**

பொருளாதார முன்னேற்றம் உண்டாகும் வருடம். பொதுவாக ஒரு ஜாதகத்தில் 5 ஆம் இடத்தில் உள்ள கிரகங்கள் மிக நன்மையை செய்யும். அந்த வகையில் தற்போது அதிஷ்டத்தை கூறும் ஐந்தாம் இடத்தில் நட்சத்திரநாதன் ராகு பகவான் நிற்பதால் வருமானம், பெயர், புகழ் அந்தஸ்து உயரும். மெமோ வாங்கி வேலைக்குச் செல்லாமல் இருந்தவர்களுக்கு வேலையில் சேர உத்தரவு வந்து விடும். தொழிலில் போட்டிகள் இருப்பினும் சமாளித்து வெற்றி காண்பீர்கள். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் லாபகரமாக இருக்கும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு பங்குதாரர்களால் வருமானம் உயரும். குடும்பத்திற்குப் பொன், பொருள் வாங்குவீர்கள். புத்திர பாக்கியம், வீடு, வாகன யோகம் போன்ற தடைப்பட்ட அனைத்து விதமான பாக்கிய பலன்களும் தேடி வரும்.

திருமணம் மற்றும் சுப காரியங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடத்தலாம். விலகிய குடும்ப உறவுகளின் புரிதல் மகிழ்ச்சி அதிகரிக்கும். விண்ணப்பித்த வீடு, தொழில் முன்னேற்ற கடன் கிடைக்கும். வீடு மாற்றம் அல்லது வேலை மாற்றம் ஏற்படும். காலத்தின் அருமை அறிந்து செயற்பட வெற்றி நிச்சயம். ராகு காலத்தில் துர்க்கை அல்லது காளியை வழிபடவும்.

**விசாகம் 1, 2, 3**

துலாம் ராசி விசாகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு 2026 ஆம் ஆண்டு தொழில் வியாபாரம் முன்னேற்றமாக நடக்கும். எதிலும் சிறப்பாக செயற்படுவீர்கள். உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட மனக் குழப்பம், பணிச்சோர்வு அகலும். வாழ்க்கையில் அதிஷ்டம் மற்றும் வெற்றி வாய்ப்பு அதிகமாகும். நீங்கள் எதிர் கொள்ளும் காரியங்களில் வெற்றியும் முன்னேற்றமும் உறுதி.

தந்தை வழிப் பூர்வீகச் சொத்துக்களின் முடிவு சாதகமாகும் சிலர் புதிய கூட்டுத் தொழில தொடங்கலாம் அல்லது பழைய தொழிலை விரிவாக்கம் செய்யலாம். பணியில் எதிர்பார்க்கும் உயர்வுகள், இடமாற்றம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. பார்க்கும் வேலையை மாற்றம் செய்ய வேண்டாம்.

விரும்பிய பதவி உயர்வு தேடி வந்தாலும் பணிச்சுமை உங்களை வாட்டும். சிலருக்கு குடும்ப நிர்வாகச் செலவு, வீண் விரயங்கள் அதிகமாகும். ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். தம்பதிகளுக்குள் நல்ல புரிதல் உண்டாகும். பருவ வயதினர் மண நாளை எண்ணலாம். வீட்டில் சுப காரியங்கள் நடைபெறும். தினமும் கால பைரவ அஷ்டகம் படிக்கவும்.

**பரிகாரம்:** காமாட்சியை வழிபட லட்சுமி கடாட்சம் அதிகமாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டின்...

லேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் நிலவிய மழையுடனான வானிலையால் டெங்கு குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதன் காரணத்தால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் பொதுமக்கள் இதுகுறித்து விழிப்புடன் செயற்படுமாறும் மருத்துவர் பிரஷீலா சமரவீர கேட்டுள்ளார். (ந-7)

## இந்தியா...

டுக்கான முதலாவது அரசியல் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை (3) பி.ப 2.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை வவுனியாவில் நடைபெற்றது.

சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசியல் குழு உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ப.சத்தியலிங்கம், எஸ்.குகதாசன், இரா.சாணக்கியன், துரைராஜசிங்கம் மற்றும் கலையரசன் ஆகியோர் கலந்துகொண்டிருந்த துடன் எஸ்.சிறீதரன் மற்றும் குலநாயகம் ஆகியோர் பங்கேற்றிருக்கவில்லை.

இக்கூட்டத்தின்போது அண்மையில் நாட்டுக்கு வருகை தந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது பேசப்பட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

அத்தோடு தமிழர்களுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயபூர்வமான தீர்வை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பை உருவாக்குதல் மற்றும் இவ்வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துதல் என்பன தொடர்பில் அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் எனவும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து அவ்விடயங்கள் சார்ந்து இந்தியாவிடம் தொடர்ந்து வலியுறுத்தல்களை முன்வைப்பது எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலீடாகத் தற்போது அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு குறித்தும் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்கும் அதேவேளை, அச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்குப் பிறிதொரு சட்டம் அவசியமில்லை என்பதே கட்சியின் நிலைப்பாடு எனவும், இருப்பினும் இப்புதிய வரைவின் உள்ளடக்கங்கள் மற்றும் பாதகத் தன்மைகள் குறித்து ஆராய்வதற்கு கட்சி மட்டத்திலான கலந்துரையாடலொன்றை ஏற்பாடு செய்வதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

அக்கலந்துரையாடலில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிப்பதற்கும் அரசியல் குழு உறுப்பினர்கள் உடன்பட்டனர். மேலும் அண்மையில் மட்டக்களப்பில் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜோசப் பரராஜசிங்கத்தின் 20ஆவது ஆண்டு நினைவுகூரல் நிகழ்வில் அரியநேத்திரன் முன்னிலைப்படுத்தப்பட்டமை தொடர்பில் சிறிநேசனால் அளிக்கப்பட்ட விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என அவருக்கு அறியத்தருவதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## இலங்கைப்...

இலங்கைக்குச் சொந்தமான பல நாள் மீன்பிடிப் படகொன்று சீஷெல்ஸ் நாட்டுக் கடற்பரப்பில் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கடல் எல்லையை மீறி சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமையினால் குறித்த படகைத் தீயிட்டு எரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சீஷெல்ஸ் பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 7ஆம் திகதி மீனவர்கள் 6 பேருடன் வென்னப்புவ கடலில் இருந்து பயணித்த இஷானி 1 என்ற மீன்பிடிப் படகே கடந்த 30 ஆம் திகதி சர்வதேச கடல்எல்லையை மீறி சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றத்துக்காக கைப்பற்றப்பட்டதாக சீஷெல்ஸ் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்திருந்தது.

இதனையடுத்து குறித்த மீனவப் படகினைத் தீயிட்டு எரிப்பதற்கு சீஷெல்ஸ் பாதுகாப்புப் படையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

நாட்டின் இறைமை மற்றும் கடல் சார் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சீஷெல்ஸ் பாதுகாப்புப் பிரிவு அறிக்கையின் ஊடாக தெரிவித்திருந்தது. (ந-7)

## சோமரத்ன...

ராஜபக்ஷவைக் காணாமல் போனோர் தொடர்பான அலுவலக அதிகாரிகள் இவ்வார இறுதியில் சந்திக்கவுள்ளனர்.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இழைத்த குற்றங்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமை, மனிதப் புதைகுழிகள் மற்றும் அவற்றுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களின் பெயர் விபரங்கள் உள்ளிட்ட சகல உண்மைகளையும் வெளிப்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாக சோமரத்ன ராஜபக்ஷ அறிவித்திருந்ததன் பின்னணியிலேயே குறித்த சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பாட...

மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் இன்று முதல் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2026 கல்வி ஆண்டின் முதல் தவணை நடவடிக்கைகள், கடந்த டிசம்பர் 09 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைவாக முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## வெனி...

கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"ஐநா சாசனம் மற்றும் சர்வதேச சட்டங்களின்படி, அனைத்து நாடுகளினதும் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும். அனைத்து ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடுகளும் இந்த விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டியது கட்டாயமாகும்.

இந்த விவகாரம் தொடர்பாக இன்று (5) நடைபெறவுள்ள ஐநா பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டத்தை தாமதமின்றி நடத்துமாறு இலங்கை தரப்பிலிருந்து முன்மொழியப்பட்டுள்ளது.

ஐநா சாசனத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணாகச் செயற்படுகின்றமை தொடர்பில் ஐநா பொதுச் சபையிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்என்பது இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ந-7)












































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாப்பிள்ளை தேவை

01. இருபாலை, இந்து, 1997, ரோகிணி, IT degree ayurvedic doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55043)
02. சுன்னாகம், இந்து, 1988, பரணி, MSc(UK), UK citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54543)
03. கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, Phd in Bio Chemistry, Germany citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54321)
04. சாவகச்சேரி, இந்து, 1994, அஸ்தம், BDS (University of Jaffna), Dental doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54201)
05. இருபாலை, இந்து, 1998, உத்தராடம், HNDA in Accounting மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (49646)
06. அச்சுவேலி, இந்து, 1995, பூசம், B.Com Accountant, Australia citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (43129)
07. அச்சுவேலி, இந்து, 1992, ரோகிணி, BSc(Hons) in biological science மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (41136)
08. கந்தரோடை, இந்து, 2000, திருவாதிரை, Software Engineering மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (35870)
09. இளவாலை, இந்து, 1987, திருவாதிரை, Dentist doctor, canada citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32087)
10. சுன்னாகம், இந்து, 1995, திருவாதிரை, BSc(Hons) Micro biology, translational data scientist மணப் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30662)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (C-4748)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4747)

076 825 7716 (ஆகாஸ்)

## வீடு வாடகைக்குத் தேவை

15 வருடகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் இடங்களில் வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

01) சாவகச்சேரி (A9 பிரதான வீதி)
02) கோப்பாய் (பருத்தித்துறை பிரதான வீதி)
03) நெல்லியடி (பருத்தித்துறை பிரதான வீதி)
04) சங்கானை (சண்டிலிப்பாய்ச் சந்தியிலிருந்து சங்கானைச் சந்தி வரை)

(6464)

தொடர்புகளுக்கு:076 073 7397


## இந்திய இராணுவத் தளபதி இலங்கைக்கு விஜயம்

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி எதிர்வரும் புதன்கிழமை (07) இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தமது இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தின் போது, ஜெனரல் திவேதி இலங்கை இராணுவத் தளபதி, பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட சிரேஷ்ட இராணுவ மற்றும் முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)



## Voyzant இந்தியா கோவில்கள்

ஆறுபடை வீடு, திருப்பதி, திருநாகேஸ்வரம், இராமேஸ்வரம்
சிதம்பரம், ஸ்ரீரங்கம், வைத்தீஸ்வரன், மேல்மருவத்தூர்
திருவண்ணாமலை, மதுரை மீனாட்சி, திருவெண்ணெய்நல்லூர், சங்கரப்பாணி
திருவானைக்கா, காஞ்சிகாமாட்சி, ராமர்கோவில், திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்
189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)
இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து — தங்குமிடம்
10 நாட்கள்
மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd
புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(நிபந்தனைகளுக்குட்பட்டது) (6308)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் செல்வராசா அகில்ராஜா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (04.01.2026) ஞாயிற்றுக் கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (06.01.2026) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் அளித்தவர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் மூலம் மரியாதை செலுத்திய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கல்திட்டி.

(6474)

குடும்பத்தினர்
075 712 8913


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கரவெட்டி நெல்லியடி சிக்னல் சந்தியிலிருந்துகொடிகாமம் பிரதான வீதியில் 500m தூரத்தில் 18 பரப்புக் காணி இரண்டு பரப்பாக பிரித்து தரப்படும். குடியிருப்புச் சூழல், நன்னீரூற்று வளங்கள் உண்டு. இந்தக் காணிகளை மொத்தமாகவும் இரண்டாகவும் பிரித்தும் தரப்படும்.

இன்னும் சில துண்டுகளே விற்பனைக்குள்ளது.

(6483)

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:
077 639 4409, 076 153 2094

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை முன்பாக 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாகவும் ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதி 50m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 150m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண் தரை, நன்னீரூற்று
- 18 அடி பாதையுடன்

(3888)

தொடர்புகளுக்கு:
074 029 2338, 076 990 3039

## வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
# 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி. யாழ்ப்பாணம்.
021 222 6113, 076 443 1576

### அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
# 10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536, 077 657 9349



(C4744)

- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்.
- 25 வருடங்களாக மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
- அனுப்பப்படும் பொதிகளுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதில்லை. முழுப் பெறுமதியையும் எமது நிறுவனம் பொறுப்பேற்கும்.
- உங்கள் வீடுகளுக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்படும் சேவைக்கு மேலதிக கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

கிளைகள்: # 01 தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | # 01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. | CTB பஸ் டிப்போ எதிரில் பருத்தித்துறை. | கொமர்ஷல் வங்கி அருகில் கிளிநொச்சி.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.101, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org